Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 } ஈரோடு · 22-5-1948 சனிக்கிழமை { மலர் 37.

திராவிடஸ்தான் கவர்ன்மெண்டு அமைப்பு.

கர்நூலில் திராவிடர் கூட்டம்.

★

ஹைதராபாத்திலும் சென்னை மாகாணத்திலுமுள்ள திராவிடர்களின் சார்பாகச் சென்னைத் தோழர் வைத்திய லிங்கம் அவர்கள் தலைமையில் 9—4—48ம் நாள் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்திய யூனியனிலிருந்து திராவிடஸ்தான் பிரிக்கப்பட வேண்டியது குறித்துப் பல பிரபல பேச்சாளர்களால் வலியுறுத்திப்பேசப்பட்டது.

திருமதி கமலாம்பாளும் தோழியர் சரோஜா ராணியும் தொடர்ந்து பேசினர். ஆந்திர, தமிழக, கேரள நாடுகள் மொழிவாரி அடிப்படையில் தனிச் சுயேச்சை அரசுகளாக இருக்கவேண்டுமென்றும், மேலும் வடநாட்டிலிருப்பது போல இங்கேயும் மைசூர், திருவாங்கூர், நைசாம் ஆகியவைகளின் யூனியன் அமைக்கப்பட்டு, மொழிவாரி மாகாணங்களுடன் சேர்ந்து தென்னிந்திய யூனியன் என்னும் பெயருடன் விளங்கவேண்டுமெனவும் கூறப்பட்டது. ஒரு யூனியன் என்ற முறையில் நாமும் பிற அயல்நாடுகளுடன் வியாபாரம், அனாக்ரமிப்பு சம்பந்தமாக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளவேண்டும்; நமது மதிப்புக்குரிய வழிகாட்டியான காந்தியடிகளை இரக்கமின்றிப் படுகொலை புரிந்த வடநாட்டாரின் தொடர்பில்லாமல் நமது யூனியன் ஆட்சி பொருளாதாரத் துறையில் முன்னேறவேண்டும்; நாம் எக்காரணத்தை முன்னிட்டும் வடநாட்டாரின் முதலாளித்துவ ஆதிக்கத்தை நம் நாட்டில் வளரவிடமாட்டோம் என்பதாகவும் பேசப்பட்டது.

பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரேமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. மகாத்மா காந்தியை அக்கிரமமாகக் கொன்ற வடநாட்டாருடன் நாம் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது.

2. இந்தியா, திராவிடஸ்தான் ஆகிய இடங்களின் பொருளாதார மதிப்பைக்கவனியாமல் இந்திய ரிசர்வ் பாங்கு மூலம் கரன்சி நோட்டுகளை வெளியிட்ட செயலை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

3. வடநாட்டார் காந்தியடிகளின் உபதேசங்களை உதாசீனம் செய்தபடியால், தென்னாட்டார் தம் நாட்டை யூனியனிலிருந்து பிரித்துக்கொண்டு, காந்தியாரின் உபதேசங்களின் அடிப்படையில் தனிச் சுதந்தர நாடாக நிறுவி வாழவேண்டுமென்றும் இக்கூட்டம் கருதுகிறது.

4. திராவிடஸ்தான் அரசியலை நிறுவவும், கடிதப் போக்குவரவு மூலம் பெரும் சக்திகளின் நல்லெண்ணத்தைப் பெறவும், அகிம்சை முறையில் நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலை நிறுத்தவும் ஒரு கமிட்டியைத் தற்காலிகமாக நிறுவவேண்டும்.

5. தோழியர் சரோஜா ராணிக்குக் கடிதப் போக்குவரவு சம்பந்தமாக முழுஉரிமையளிக்கிறது.

இந்தத் தீர்மானங்களை எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்புவதோடு இந்தியாவில் உள்ள பிறநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் அனுப்பிவைப்பது.

6. தற்காலிகமாக இந்த அமைப்புக்கழகம் செக்கந்தராபாத்தில் இருப்பது.

ஆகவே இதுசம்பந்தமான கடிதங்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

எஸ். சரோஜாராணி,
அமைப்புச்செயலாளர், திராவிடஸ்தான் அரசாங்கம்,
6665, இமாம்பவாடி, செக்கந்தராபாத் (தக்காணம்).

குறிப்பு:—இப்போதைய நிலையில் இந்த நிகழ்ச்சிகள் நமக்குச் சிறிதும் சம்பந்தமில்லையென்றாலும் நம் கவனத்தை இழுக்கக்கூடியது என்பதில் தடையில்லை. இந்நிகழ்ச்சியை இந்நாட்டுத் தேசியத் தாள்களுக்கு அனுப்பப்பட்டும், அவைகளில் ஒன்றுகூட வெளிப்படுத்தவில்லை என்கிற உண்மையையும் தோழர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். [ஆ-ர்.]

பெண்கள் பகுதி:

கன்னித் தோழியர்க்கு!

''தோழியர் டி. மங்கையர்க்கரசி''

★

அடுத்து வரும் மாதங்களில் பெரும்பாலான, கன்னிப் பெண்களின் வீட்டுச்சிறைக்கு விடுதலை (கல்யாணம் செய்துதான்) கொடுக்கப்படும் மாதங்களாக இருப்பதால், எனது மதிப்பிற்குரிய கன்னித் தோழியர்க்கு சில யோசனைகளைக் கூற ஆசைப்படுகிறேன். உங்கள் திருமணத்திற்கு நீங்கள் கவனிக்கவேண்டிய விஷயங்கள் நிறைய இருந்தாலும் என் அறிவுக்கு எட்டிய சில சங்கதிகளையே உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

தோழியர்களே! உங்கள் திருமணத்தில் இரண்டறக்கலந்து வேலை செய்பவர்கள், பெற்றோர், தரகர், சோசியர், புரோகிதர்கள். இதெல்லாம் பழைய சம்பிரதாயப்படி நடக்கும் திருமணங்களில் தான் என்றாலும், இந்த 48-ம் வருடத்திலும்கூட இத்தகைய திருமணங்கள் தான் பெரும்பாலும் நடைபெற்று வருகிறதென்றவேதனையைச் சொல்லாமல் இருக்க முடிய வில்லை. இப்படி நடக்கும் திருமணங்களிலே நம்மை யாரும் அபிப்பிராயம் கேட்க மாட்டார்கள். நமது ஜாதகங்களின் அபிப்பிராயங்களைக் கொண்டே தான் முடிப்பார்கள். பாரதியார் பாடியது போல், நாயை நல்லவிலையில் விற்கும்போது, எப்படி அந்த நாயை யோசனை கேட்க மாட்டார்களோ, அதே போல் தான், நம்மைக் கொல்லத் துணியாமல் பயங்கரச் சூழ்நிலையில் தள்ளி விடுவார்கள். அதற்காக நாம் இனியும் பயப்படவேண்டியதில்லை! நமது மதிப்பிற்குரிய புரட்சிக்கவிஞர் அவர்கள் இதோ துணைவருகிறார் பாருங்கள்!

''கனத்த உன் பெற்றோரைக்
கேளே!—அவர்
கல்லொத்த நெஞ்சையுன்
கண்ணீரி னாலே!
நனைத்திடுவாய் அதன் மேலும்,
—அவர்!
ஞாயந்தராவிடில் விடுதலை மேற்
கொள்!

என்ன அருமையான காவியம்? நமது பெற்றோரை நாம் ஏன் இப்படிக் கேட்கக் கூடாது? எனக்கும் நீங்கள் தேடிய அந்த மணமகனுக்கும் கருத்தில்வேறுபாடு இருக்கிறது; இதற்கு நான் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? உங்களுக்காக நான் நடத்திக் கொண்டு என் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்வதா? தயவு செய்து என் கொள்கைக்கு ஒத்த ஒரு மணமகனைத் தேடி எனக்கு மணமுடிக்க முற்படுங்கள். பாழுங்கிணற்றில் ('வாழ்க்கைக் கிணற்றில் தான்) தள்ளி விடாதீர்கள்! அப்படி நீங்கள் தள்ளினாலும் கூட, நான் விழாமல் தப்பித்துக்கொள்வேன் என்று சொல்லுங்கள். பிறகு பெற்றோர்கள், நமது இஷ்டப்படி நிச்சயம் நடப்பார்கள். ஆனால், கடைசிவரை நமது உறுதியை மட்டும் தளரவிடக்கூடாது. கொஞ்சம் ஏமாந்தால் போதும்! தரகன் பிரமாண்டமாக அளப்பான், பெற்றோர் தேனில்விழுந்த ஈயாகி விடுவார்கள், அவன் அளப்பதைப்பார்த்து. ஆகவேகொஞ்சம் உஷாராக இருக்கவேண்டும். கை நிறைந்த பொருளைவிட கண் நிறைந்த கணவனே மேல் என்பார்கள். ஆனால் அதையெல்லாம்விட கருத்து நிறைந்த கணவன் தான் சாலச் சிறந்தவன் என்று நான் கருதுகிறேன். பணமும் அழகும், நம்மைப் பிணைக்காது. அன்புதான் நம்மைப் பிணைக்கும். ஆகவே ஒவ்வொரு தோழியர்களும், தங்கள் திருமணத்தை முடித்துக்கொள்ளும் போது, மணமகன் பகுத்தறிவுத் துணை உள்ளவனா என்று ஆராய்ந்தே சம்மதிக்கவேண்டும்!

தோழியர்களே! பொன்னியின் முதல் இதழில், அறிஞர் அவர்கள் எழுதிய ''வாழ்வில் விழா'' என்ற கட்டுரையை நீங்கள் படித்திருக்கலாம். அதில் சில வாக்கியங்களை இந்தச் சமயத்திலே உங்களுக்கு ஞாபகமூட்டினால் பலன் அளிக்கும் என்று கருதுகிறேன். ''என் கோகிலத்தின் ரோஜா நிறத்துக்கும் அவள் உடுத்திருக்கும்—வெளிர் நீலப்புடவைக்கும் தானடி பொருத்தமாக இருக்கிறது. மரக்கடைப் பொன்னுச்சாமியின் மகள் ஒரே கருப்பு. அதுவும், இதைப்போல நீலநிறச் சேலை உடுத்திக் கொண்டிருக்கிறது. பார்க்கச் சகிக்கவே இல்லை என்று பேசும் தாய்மார்களைப் பார்க்கிறோம். பெண்ணின் நிறத்துக்கும் புடவையின் நிறத்துக்கும் பொருத்தம் பார்க்கும் அளவுக்குக்கூட அவளை மணமுடிக்க வருபவனின், குணத்துக்கும், அவளுக்கும் பொருத்தந்தானா என்று ஆராய மனம் இடந்தரவில்லையே, இப்படிப்பட்ட திருமணங்களிலே, திருவோ மணமோ எப்படி இருக்கமுடியும்?'' என்று கேட்கிறார். உண்மையில், கல்யாண வீட்டில் தாய்மார்கள் போகட்டும், திருமணத்தை முடித்துக்கொள்ளும் கன்னித் தோழியர்கள்கூட தகிட்டுச் சேலைக்கும், வைர நெக்லேசுக்கும் வழிவகுத்துக் கொள்ள முற்படுகிறார்களே தவிர, தங்கள் வாழ்க்கைக்கு இவன் வழிகாட்டியாக இருப்பானா என்பதைத் தெரிந்து கொள்ள முற்படுவதில்லை. இன்னும் சில தோழியர்கள், பணத்திற்கு அடிமைப்பட்டு, தங்கள் இளம் வயதையும் மறந்து, 45 வயதான இரண்டாந்தாரக்காரனையோ, அல்லது மூன்றாந்தாரக்காரனையோ, தாராளமாக மணமுடித்துக் கொள்கிறார்கள். இந்த மாதிரி மணம் முடித்துக் கொண்ட இளந் தோழியர்களை, அவர்களுடைய கிழக்கணவன்மாரின், முதல் தாரத்தின் மூலம் அடைந்த பேரன் பேத்திமார்கள், ஏ பாட்டியம்மா! பாட்டியம்மா!! என்று அழைக்கும் காட்சி சகிக்கவே முடிகிறதில்லை.

45 வயதுடைய விதவைக் கிழவியை மணமுடித்துக் கொள்ள 20 வயதுள்ள வாலிபன் எங்காவது. சம்மதிக்கிறானா? அப்படிச் சம்மதித்து எங்காவது திருமணம் நடந்திருக்கிறதா? இல்லை அல்லவா? பின் ஏன் நமக்குத் தகப்பனுக்குச் சமமான வயதினனான ஒருவனை நாம் தாரமாகக் கொள்ள வேண்டும்? இதைப்பற்றி எந்தத் தோழியாராவது சிந்திக்கிறார்களா? சிந்தித்தால் நமது மானங்கெட்டதனத்திற்கு நாமே தலை குனிய வேண்டாமா? ஞாயமாக நம்வயதைவிட மூன்று வயது மூத்தவனாகவோ, அல்லது அய்ந்து வயது மூத்தவ

(தொடர்ச்சி 16-ம் பக்கம்)

பெரியாரவர்களின் தலைமைப் பேருரை.

★

(சென்ற வாரத் தொடர்ச்சி)

மதம்—கல்வி.

இனி, மதம் கல்வி என்னும் நிலை பற்றிச் சிறிது பேச ஆசைப்படுகிறேன். இதுவரை நம் நாடு அன்னிய ஆட்சிக்கு அடிமைப்பட்டுக் கிடந்ததால் மக்களைப் பிரித்து வைக்கவும், மக்களுக்கு அறிவு ஏற்படாமல் இருக்கவுமான மதத்தையும், கல்வியையும், நமக்கு அளித்து, அதுவும் ஏழைப் பாட்டாளி மக்கள் கீழ் ஜாதியாகி, சுரண்டப்படுவதற்கு ஏற்ற மதமும் 100க்கு 90 பேர்களாக உள்ள பாமர மக்கள் தங்கள் எண்ணிக்கைக்கு ஏற்ற விகிதாச்சாரம் கூட, தன் பெயரை எழுதப் பெறுவதற்கும் இல்லாத அளவு கல்வியும்அளிக்கப்பட்டு வந்து, தாழ்த்தப்படவும், சுரண்டப்படவும், மடமையாக்கப்படவும், அடிமையாகவே இருக்கப்படவுமே இருந்து வந்தது என்னலாம். இப்போது சுயராஜ்ஜியம் வந்து மக்கள் ஆட்சி ஏற்பட்டு விட்டது. அதுவும் புராண சுயராஜ்ஜியமாக ஏற்படப் போகிறது என்ற நிலையில் இனி என் மக்களுக்குள் பிரிவும், கீழ் ஜாதி, மேல் ஜாதித் தன்மையும், சுரண்டலும் அளிக்கும்படியான, ஏற்படுத்தும்படியான தன்மை கொண்ட மதம், நாட்டில் எதற்கு ஆக இருக்க வேண்டும்? கையெழுத்துப்போடுவதற்கே தெரியாத மக்கள் 100க்கு 90 பேர்கள் இருக்கும்போது, “மேல்படிப்பும்” மேல்படிப்புக்கல்லூரிகளும், சர்வகலாசாலைகளும், மக்களின் வரிப்பணத்தை ஏன ஆக்கிரமித்துக் கொள்ளவேண்டும். B. A., B. L., M. A,, M. L., BSc., MSc. என்பதாக மக்கள் 10 வருடம் 15 வருடம் 20 வருடம் படித்து, படிப்பு முடியும்படியான படிப்புக்கு ஏராளமான பணத்தை ஏன் செலவழிக்க வேண்டும்? அப்படிப்பட்ட அந்தப்படிப்பையும் மக்கள் சமுதாயத்தில் 100க்கு மூன்று பேராயுள்ள ஒரு தொகுதியினர் அதுவும் பாட்டாளி மக்களல்லாதவர்கள், இந்நாட்டு நலத்தையும், மொழியையும், கலையையும் மக்கள் சமவாழ்வையும் முக்கியமாய்க் கருதாத ஜாதியார்களானவர்கள், மேற்படி படிப்பில் 100க்கு 50 பாகம் பெரும் படிப்பாளராகவும் இருப்பானேன்? இந்தத் தன்மை கொண்ட படிப்பை எப்படி “மக்கள் சுயராஜ்ஜிய காலத்தில் கற்பிக்கும் படிப்பு” என்று சொல்ல முடியும்?

சன்மார்க்க சமரச தத்துவத்தை, நெறியைக்கண்ட இந்நாட்டிலா “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்ற இந்த நாட்டிலா, “பார்ப்பனன்--பறையன், பிராம்மணன்-சூத்திரன், பஞ்சமன்” என்கின்ற மதமும், திருவள்ளுவனார் செய்த திருக்குறளை அல்லாமல் மனுதர்ம சாஸ்திரமும், பராசர், யக்ஞவல்கியர் தர்ம சாஸ்திரமும், கீதையும் சட்டமாக, சாத்திரமாக, நடப்பு முறையாக இருக்க விடுவது? மனுதர்மத்திலும், இந்து லாவிலும் 100க்கு 3 பேராயுள்ள ஒரு சின்ன ஜாதி பிராமண ஜாதியாகவும், 100க்கு 90க்கு மேல் உள்ள பாட்டாளி, பழங்குடி மக்கள் ஜாதி சூத்திர பஞ்சம ஜாதியாகவும் ஏன் இருக்கவேண்டும்? இதுவா இவ்வளவு பாடுபட்ட சுயராஜ்ஜியம் என்பதில் மனிததர்ம முறையாயிருப்பது? மனுதர்மத்தைப் படிப்பிப்பதா பொதுக்கல்வி? புராணத்தை ஒப்புவிக்கச் செய்து புரிய வைப்பதா அறிவுக்கல்வி? அதுவும் குறள் பிறந்த இந்நாட்டிலா? அரசியல் நிர்ணயசபைத் தோழர்களே இன்றைய அரசியல் நிர்ணயசபை இக்கொடுமையை மத்திய அரசாங்கம் இதைக் கவனிக்குமா? அல்லது நம் மாகாண அரசாங்கமாவது இதைக் கவனிக்குமா? இந்த நிலையில் இதை எப்படித்தான் சுயராஜ்ஜியம், இந்நாட்டு மக்கள் ராஜ்ஜியம் என்று சொல்லுவது? என்பது எனக்குப் புரியவில்லை.

அன்றியும் சுயராஜ்ஜியம் நமக்குக் கிடைத்த முதல் ஆண்டிலேயே ஆண்டு ஒன்றுக்கு 130 கோடி ரூபாய் அன்னிய நாட்டுடன் யுத்தம் செய்ய நிதிமந்திரியால் தொகை ஒதுக்கப்பட்டு இருக்கிறது. பாதுகாப்பு மந்திரி சர்தார் பட்டேல் கணக்குப்படி காஷ்மீர் யுத்தத்திற்கு 1-1-48 முதல் தினம் 4 லட்சம் ரூபாய் செலவாகிறது. நிதி மந்திரி சா. ஆர். கே. சண்முகம் கணக்ருப்படி அகதிகள் செலவு தினம் 15 லட்சம் ரூபாய் செலவாகிறது. சுயராஜ்ஜியம் வந்த 6 மாதத்தில் காந்தியார் உயிரைப் பார்ப்பனீயம் என்னும் பஹறி அடித்துக் கொண்டு போய் விட்டது. மதச் சண்டை, வகுப்புச்சண்டை காரணமாகப் பல்லாயிரம் உயிர்கள், பல கோடிச்சொத்துக்கள் நாசமாயின, இன்னும் பல இடங்களில் சேதமாய் வருகின்றன, பெண்கள் நிலை சொல்லவே கூசுகிறது, நம் விவகாரம் அய்க்கிய நாட்டுப் பஞ்சாயத்திற்கு அமெரிக்காவுக்குக் காவடி போய் உலகம் சிரிக்கிறது. இவைதானா ஞான பூமி, புண்ணிய பூமி, சுதந்தர பூமியின் லக்ஷணம்? இதற்கெல்லாம் காரணம் என்ன? பின்விளைவைச் சிந்திக்கப்போதுமான அறிவும், பொறுப்பும் இல்லாத மக்கள், மக்கள் தன்மையை அறிய முடியாத மக்கள், ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டு குரங்கு கையில் சிக்கிய பூமாலை போல் மைனர் விளையாட்டு விளையாடுகிறார்கள், மதிப்பறியாமல் என்பதல்லாமல் வேறு என்ன சொல்ல முடியும்?

தொழிலாளர் நிலை.

ஏழைப் பாட்டாளி மக்கள், தொழிலாளி மக்கள் கூலி போதாதென்று பட்டினி கிடந்து, போலீஸ்காரன் குண்டுகளுக்கு இரையாகிச் சொத்பொத்தென்று கீழே விழுந்து உயிர்விடும்போது, அவன் பெண்டு பிள்ளைகள் கஞ்சிக்கு ஆலாய்ப் பறக்கும்போது, பட்டேலுக்கும், நேருவுக்கும், பிரசாத்துக்கும், ஆஜாத்துக்கும், சரோஜினிக்கும் மாதம் 5000, 6000 வீதம் சம்பளமும், அரசபோக மாடமாளிகை, அரண்மனை வாசமும், நேரு தங்கை விஜயலட்சிமிக்கும், சுற்றத்தாருக்கும் மாதம் 8000 சம்பளமும், அரசபோக வாழ்க்கையும், அடிக்கடி ஆகாயக் கப்பல் போக்குவரத்துப் பிரயாணமும் என்றால் இந்தத் தலைவர்களெல்லாம் மக்கள் பிரதிநிதிகளா? நாட்டு மக்களுக்காகப் பாடுபடும் தியாகிகளா? அல்லது டர்பிள்ஸ்வீப் என்னும் லாட்டரியில் முதல் பிரைஸ் அடித்த ‘பாக்கியசாலி லட்சுமி புத்திரர்களா’? ஏழைப் பாட்டாளி மக்கள் முதலாளிகளின் கொடுமையால் வேலைவிட்டு, வீடுவாசல் விட்டு, நாடு முழுவதும் பிச்சை எடுக்கத் துணிந்து அலையும்போது முதலாளிகள் நிலைமை எப்படி இருக்கிறது? பணத்தைக் குவிக்கிறார்கள், மாடமாளிகைகளைஉயர்த்துகிறார்கள், பஞ்சணையில் கொஞ்சி விளையாடுகிறார்கள், மந்திரிகளோடு சல்லாபமாய் உலவுகிறார்கள். முதலாளிகளும் மந்திரிகளும் காதலர் காதலிகளாய் உல்லாசக் கிரிடைகள் நடத்துகிறார்கள். டீபார்ட்டி, நாட்டியக் கச்சேரி, இசையரங்கு, சாமி தீபாராதனைபோல் என்ன வேடிக்கை எவ்வளவு கேளிக்கையாய் வாழ்கிறார்கள். சுயராஜ்ஜிய நாட்டில் சமதர்ம வாதி—பொது உடைமை வாதி-ஏகாதிபத்திய எதிர்ப்பு

புராணகாலத் தேவர்கள் ராஜ்ஜியமா? நாகரீக கால மக்கள் ராஜ்ஜியமா?

★

வாதி என்றெல்லாம் தப்பட்டை அடித்து விளம்பரம் செய்யப்பட்டு பேர் பெற்ற பண்டித ஜவஹர்லால் நேருவின் (முதல் மந்திரி) தலைமையில் ஏழைப் பாட்டாளி மக்கள் கதி இதுதானா? நூற்றுக்கணக்கான நாட்களாகக் கோவை மில்லுகளில் போராட்டங்கள் நடக்கின்றன. நாட்டில் பல நூற்றுக்கணக்கான வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டு தொழிலாளிகளும் மக்களும் அல்லல் பட்டு மிருக ஜீவன்கள் போல் படாதபாடுகள் படுகின்றனர். இவைகளையெல்லாம் பார்த்தும், தங்களால் இவைகளை அடக்க முடியாமல் பரிகாரம் செய்ய முடியாமல் போயுங்கூட தொழில் ஸ்தாபனங்களையெல்லாம் சர்க்கார் ஏன் ஏற்று நடத்தாமலிருக்கிறார்கள்? இதற்குச் சமாதானம் சர்க்கார் அல்லது மந்திரிகள் முதலாளிகளின் ஆசை வலையில் சிக்கி அழுந்திவிட்டார்கள் என்பதைத் தவிர, அல்லது இந்த மந்திரிகள் நிலையில்லாதவர்கள் ஆனதால் கிடைத்தவரை சுருட்டுவோம் என்கின்ற வேலைத் திட்டத்தைக் கையாளுகிறார்கள் என்பதைத் தவிர வேறு எதைச் சொல்ல முடியும்? என்று கேட்கிறேன். இந்நாட்டுத் தொழிலாளிகள் இப்படி அல்லல் படுகிறார்கள் என்றால் இந்த ஆட்சி முதலாளிகள் ஆட்சி என்றுதானே ஆகிறது?

வகுப்பு முறை.

பல மதம், பல ஜாதி, பல வகுப்பு உள்ள இந்நாட்டின் ஆட்சி முறை இந்நாட்டு மக்கள் யாவரும் சமஉரிமை அடையும்படி ஆட்சி செய்வதா? அல்லது 100-க்கு 3 பேர்களாக உள்ள மேல் ஜாதிக்காரர்கள் என்பவர்கள் அனுபவித்தது போக, சுரண்டியது போக மீதி உள்ளதைத்தான் மற்ற ஜாதியார் (100-க்கு 97 பேர்கள்) அனுபவிப்பது என்கின்றதான முறைதான் சுயராஜ்ஜியமா? என்று கேட்கிறேன்.

கீழ் ஜாதியாய், கீழ் வகுப்பாய் இருந்து கஷ்டப்படுகிற மக்கள் தங்கள் ஜாதி நிலையைச் சொல்லி, தங்கள் வகுப்பு நிலையைச் சொல்லி உரிமை கேட்கக் கூடாது என்றும், அப்படிப்பட்ட வேண்டுகோள்கள் கவனிக்கப்படமாட்டாது என்றும், ஆட்சியாளர்கள் உத்திரவு போடுகிறார்களே இது நியாயமாகுமா? நேர்மையாகுமா? கீழ் ஜாதி மக்கள் என்பவர்கள் மேல் ஜாதியாரைப்போல் இருக்க உரிமை கேட்கக்கூடாதென்றால், ஆட்சி இந்த வர்ணாஸ்ரம தர்மப்படி ஆட்சி செய்கிற சுயராஜ்ஜியம் என்றுதானே அர்த்தமாகிறது? இந்நாட்டு மக்கள், வர்ணாஸ்ரம ஆட்சிக்கு ஆளாகவா 'வெள்ளையனே வெளியே போ' என்று சொன்னார்கள்? வர்ணாச்சிரம ஆட்சிதானா சுயராஜ்ஜியம் என்று சொல்லப்பட்டது? இது எவ்வளவு கல்நெஞ்சத்தோடு, எவ்வளவு மனித தர்மத்தைப் புறக்கணிக்கும் துணிவோடு போடும் உத்திரவாக இருக்க வேண்டும்? சட்டத்திலும், சாஸ்திரத்திலும், மதத்திலும், கோவிலிலும், கலையிலும், நடப்பிலும், ஜாதிப்பிரிவுகளும் அதற்குத் தகுந்த நடப்பு முறைகளும் இருக்க வேண்டும். ஆனால் "ஜாதிக் கொடுமை குறை நீங்க வேண்டும்" என்று மாத்திரம் சொல்லக் கூடாது என்றால், இது இராமாயண முதலிய புராண காலத் தேவர்கள் ராஜ்ஜியமாகுமே தவிர, நாகரீக கால மக்கள் ராஜ்ஜியமாகுமா என்று கேட்கிறேன்.

"இன்றையச் சுயராஜ்ஜியத்தில் ஜாதிப் பிரிவு இருக்காது. ஜாதி முறை பார்க்கப்படமாட்டாது. ஒரே ஜாதி மனித ஜாதிதான் உண்டு" என்று என் ஆட்சியாளர்கள் சொல்லக் கூடாது? வெள்ளையன் ஆட்சி 200 வருடம் இருந்த காலத்தில் எப்படி நடந்ததோ, அதைவிட எத்தனையோ பங்கு மோசமாக இந்த 6 மாதத்தில் நடக்கத் தொடங்கியிருப்பது கொடுங்கோல் ஆட்சியேயாகும். வகுப்புக் கொடுமை நீக்கப்படவில்லையானால் வகுப்புப் பிரிவு நீக்கப்படவில்லையானால், இந்த ஆட்சி மாத்திரமல்ல, இந்த நாடே அழிந்து காடாக, சுடுகாடாகப் போவது நல்ல காரியமாகும்.

என் நிலை.

தோழர்களே! இன்றைய ஆட்சியைப்பற்றி இவ்வளவு பேசுவதற்கு எனக்கு உரிமை இல்லை என்று எவரும் கருத முடியாது. இந்த நாட்டில் இதன் விடுதலைக்காக, சுயராஜ்ஜியத்துக்காகப் பாடுபட்ட எவரையும்விட சிறிதும் குறையாத உரிமை, சுயராஜ்ஜியத்தில் பங்கு எனக்கு உண்டு. எப்படி என்றால், சுயராஜ்ஜியத்திற்குக்காக யாரையும்விட குறையாத அளவுக்கு, இன்றுள்ள யாரையும்விட முன்னாலேயே நானும் பாடுபட்டு இருக்கிறேன். பல கஷ்ட நஷ்ட சுகங்களை அடைந்த தியாகிகள் என்பவர்கள் வரிசையில் முதலாவதாகவும் இருக்கிறேன். என்னைப் பொறுத்தவரை சுயராஜ்ஜியத்தின் பேரால், யாதொரு பிரதிப் பிரயோஜனமும், கூலியும் பெறாத, எவ்விதச்சுயநலமற்ற தொண்டாற்றிய உரிமை கொண்டாடுவதற்குரிய உரிமையுடையவனாவேன், 1918, 19-ல் இந்த நாட்டில் காங்கரசின் பேரால், மக்கள், அதிலும் பார்ப்பனர்கள் வெளியில் சிறிதும் தலைகாட்ட முடியாமல் இருந்த காலத்தில் அரசியலையும் மக்கள் ஆதரவையும் திராவிட மக்கள் (பார்ப்பனரல்லாத வர்களே) கைப்பற்றி ஆட்சி செய்கிற காலத்தில், பார்ப்பனர்கள் இன்னது செய்வது என்று தோன்றாமல் திகைத்து நின்ற காலத்தில், நானும் டாக்டர் வரதராஜுலு நாயுடுவும், தமிழ்ப் பெரியார் திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரும், அவ்வாட்சிக்கு எதிரிடையாகத் திடீரென்று வெளியில் வந்து, என்னைப் பொறுத்தவரையில் நான் அனுபவித்துக்கொண்டிருந்த பல பதவிகளைத் துறந்து, பட்டங்களை வெறுத்து, ஒதுக்கித்தள்ளி என் தொழிலையும், வருமானத்தையும் கூடதுச்சமாகக் கருதி முழுநேரத் தொண்டனாகவெளிவந்து, மூவருமாய், நாள்தோறும் கால் நடையாயும் பட்டி தொட்டியெல்லாம் நுழைந்து, பிரச்சாரம் செய்து அன்றிருந்த திராவிட மக்கள் ஆட்சியைக் கவிழ்த்து, பார்ப்பனர் கைக்கு இந்த ஆட்சிவரப் பெரும் பங்காளிகளாக இருந்தோம். அன்று நாங்கள் தெரிந்தோ, தெரியாமலோ பார்ப்பனர்களுக்குக் கையாள்களாய் இருந்து, பாடுபட்டு இருக்கவில்லையானால், இந்த நாட்டில் பார்ப்பனர் வாழ்வு அஸ்தமித்து இருக்கும். நாங்கள் தான் பார்ப்பனர்களுக்கு மேடை தேடிக் கொடுத்தவர்கள், நாங்கள் தான் பார்ப்பனர்களுக்குப் பாமர மக்கள் முன் பேசக்கற்றுக் கொடுத்தவர்கள், அவர்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தவர்கள் நாங்கள்தான். பார்ப்பனர்களுக்குத் திராவிட மக்களைச் சேனையாக ஆக்கிக்கொடுத்தோம். நானும் வரதராஜுலு நாயுடுவும் தான் முதல் முதல், ஏ. பி. கிளாஸ் இல்லாதகாலத்தில் ஜெயிலில் புகுந்து மக்களுக்கு ஜெயில் பிரவேசத்தில் உற்சாகம் ஏற்படும்படி செய்தோம்.

ஒரு சந்தர்ப்பத்தை இதில் குறிப்பிட்டேனேயானால் என்னைத் தற்பெருமைக்காரன் என்று பலர் கருத நேரிடும். இருந்தாலும், அக்குற்றத்திற்கு ஆளாகத் துணிந்தே, அவசியம் பற்றி அதைக்குறிப்பிடுகிறேன். 1921ம் வருடம் (என்று ஞாபகம்) டிசம்பர் 12தேதி ஈரோட்டில் 144 போட்டார்கள். அப்போது சென்னையில் ஆச்சாரியாரோடு நான் இருந்தேன். தந்தி கிடைத்தது ஈரோடு வந்து உடனே மீறினேன். 15-தேதி என்னைத் தண்டித்தார்கள். 16-தேதிகாலை 5மணிக்கு என்னையும், என்னோடு சேர்ந்த மற்ற 20, 30 பெயரையும் விலங்கிட்டுக் கோயமுத்தூர் ஜெயிலுக்கு அழைத்துப் போனார்கள். இந்தச் சங்கதி ஊரில் பரவியதும், என் மனைவி தலைமையில் தங்கை உள்பட சுமார் ஆயிரம்

[தொடர்ச்சி 13ம் பக்கம்]

இன்னும் நம்பிக்கையா ?

"இயலன்பன்"

பார்ப்பனீயத்தின் புரட்டுகளைப் பலரும் அறிந்து தெளியும் வண்ணம், அன்றோர் பொங்கல் இதழில் அறிஞர் ஒருவர் திருப்பாற் கடலில் உள்ள ஆதிசேடன் என்னும் பாம்பின் மேல் பள்ளிகொண்டிருக்கும் திருமாலின் உந்திக் கமலத்தில் வளர்ந்துள்ள தாமரையில் பிரம்மா வசிக்கிறார் என்று கூறி, தேசப்படத்தில் திருப்பாற்கடலைக் கண்டு பிடியுங்கள் எனப் பணித்தார்.

நீங்களும் தேசப் படபுத்தகத்தில் திருப்பாற்கடலைக் காண முயன்றிருப்பீர்; காணாமல் தோல்வியுற்றிருப்பீர்; பின், அதன் கண் பொருந்தியுள்ள அரவமும், மாலும்,பிரம்மாவும் இருக்க இயலாது எனத் தெளிந்திருப்பீர்; பல்லாயிரக்கணக்கான பார்ப்பனப் புரட்டுகளில் இதுவும் ஒன்றென உணர்ந்திருப்பீர்; உணர்ந்து வையகத்தேவர் (?!) வலையில் சிக்கிய திருமால் பக்தராகிய திராவிடரைத் திருத்தியிருப்பீர்; பகுத்தறிவு கொண்ட காரணம் கூறி.

இந்தத் திருமாலே கிடையாது என்பதை விஞ்ஞானம் (தாவரதா ல்கலை) மூலமாகக் கீழே காணும் உரையாடல் மூலம் வெகு எளிதாக உணர்ந்து கொள்ள முடியும், சொற்ப அறிவு இருந்தாலும். பள்ளியில் தாமரைப் பாடம் நடந்துகொண்டு இருக்கிறது.

விஞ்ஞான உபாத்தியாயர்:- பையன்களே!

தாமரை சேறு நிரம்பப்பெற்ற நீர் நிலையில் வளரும் தன்மையானது. அது எப்பொழுதும் நீர்மட்டத்தை யொட்டியே இருக்கும். மழை இல்லாமல் தண்ணீரின் அளவு குறையுமேயாகில் தாமரைத் தண்டின் நீளம் குறைந்தும், மழையினால் நீர் மட்டம் உயர்ந்தால் தாமரைத் தண்டின் நீளமும் நீண்டு உயர்ந்து நீர்மட்டத்திலேயே காட்சியளிக்கும் சிறப்பான தன்மை கொண்டதும் ஆகும் என விளக்கமாகக் கூறிவிட்டு ஏதேனும் சந்தேகம் இருந்தால் கேட்டு நிவர்த்தி செய்து கொள்ளுங்கள் என்றார்.

ஒரு பையன்:- 'ஒரு சந்தேகம் சார்'

வி. உபா:- 'என்னடா சந்தேகம்'?

பை:- நீர் மட்டத்திலேயே தாமரை இருக்கும் என்று சொன்னீர்களே சார்........'

வி. உ:- 'ஆமாம், அதற்கு என்னடா இப்போ?'

பை:- 'பிர்மா, திருமாலின் உந்திக் கமலத்தில் தோன்றிய தாமரையில் வசிக்கிறார்........'

வி. உ:- சரி!

பை:- 'தாங்கள் கற்பித்தபடி, தாமரை நீர் மட்டத்திலேயே இருக்குமானால் பிரம்மாவதியும் தாமரையின் மூலத்தை (அடி நுனியை) க் கொண்ட உந்திக் கமலத்தைப் பெற்றுள்ள திருமால் தண்ணீருக்கு அடியிலல்லவோ-பாம்பின் மேல்-படுத்திருக்க வேண்டும். அவ்வாறு பள்ளி கொண்டிருந்தால் சுவாசிக்கக் காற்றின்றி எங்ஙனம் நீண்டகாலமாக (யுகம்யுகமாக) உயிருடன் இருக்க முடியும்? மரணமன்றோ சம்பவிக்கும். எனவே திருமால் மரணமுற்றால் பிரம்மாவும் அழிய நேரிடுமே!'

'அன்றியும், திருமால் உயிருடன் இருக்கிறாரென்று நீங்கள் கூறினால், அவர் நீர் மட்டத்தின் மேல் தான் பள்ளி கொண்டிருக்க வேண்டும். எனவே உந்திக் கமலத்தில் வளர்ந்துள்ள தாமரை நீர் மட்டத்தை விட்டு சிறிது தூரம் அப்பால் சென்று இருந்தாக வேண்டும். அங்கு பிரம்மா வசிக்கிறார் என்று கொள்ளலாம் என்றாலோ, தாங்கள், நீர் மட்டத்தை ஒட்டியே தாமரை வளரும் என்று கற்பித்துள்ளீர்கள். எனவே நீரை விட்டுச் சிறிது தூரம் அப்பால் சென்று இருக்கிற தாமரையில் (இந்த நிலை ஏற்பட்டுத்தான் ஆகவேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ளது. ஆனால் விஞ்ஞானம் மூலம் இது நடக்காத செயல்) பிரம்மா வசிப்பதாகப் பொருள் கொள்ள முடியாதே. இக்காரணங்களினால் திருமாலும், பிரம்மாவும் இருக்கின்றார்கள் என்று எப்படி நம்ப முடியும், சார்'

வி. உ:- 'டேய்! அதிகப் பிரசங்கிக் கழுதை, வேறொன்றும் உன் மூளையிலே சந்தேகம் தோன்றவில்லையோ?'

பை:- இன்னும் ஒன்று சார். தாமரை, சேற்றில் வளரும் என்றீர்கள். திருமாலின் உந்திக் கமலத்தில்

[தொடர்ச்சி 12ம் பக்கம்]

சிரிப்பார் பெண்கள் !

(வாணிதாசன்)

புல்லேந்தி நமையேய்க்கும் பார்ப்பனர்கள்
புரிநூலை மார்பேந்தி எய்க்கும் கூட்டம்
சொல்லேந்தி நாவாலே எய்த்து வாழ்ந்து
தொலைவினிலே நமையொதுக்கி வைத்த காலம்
செல்லாது மாறிவரக் கண்டு கொண்டார்;
திராவிடரை மறுமுறையும் ஒதுக்க எண்ணிப்
புல்லேந்தும் கையாலே வாளை ஏந்திப்
போர் புரிவோம் என்கின்றார்; சிரிப்பார் பெண்கள்!

அரசாண்டின் திருப்பவனும் ஒருபார்ப் பானாம்!
அமெரிக்கா சென்றவனும் ஒருபார்ப் பானாம்!
பிரசாரச் சபையினிலும் ஒருபார்ப் பானாம்!
பேசுவதில் வல்லவனும் ஒருபார்ப் பானாம்!
கரியேய்க்கும் திருஅண்ணா மலையில் யோகச்
சித்தியினைக் கண்டவனும் ஒருபார்ப் பானாம்!
பெரிதாகப் பேசுகின்றார்; கிழவர் காந்தி
பிரிவிற்குக் காரணம் யார்? சிரிப்பார் பெண்கள்!

நம் நாட்டை முன்னாளில் துருக்க ருக்கு
நமையடிமை யாயாண்ட பரங்கி யர்க்கு
கம்மாள ராபண்டு காட்டித் தந்தார்?
கைகொட்டிச் சிரிப்பார்கள் பெண்கள்! வேண்டாம்!
சம்மாஎன் சலசலப்புக் காட்டுகின்றீர்!
துள்ளும்மான் குட்டிகள் நீர்! திராவி டர்கள்
அம்மம்மா புலியென்றே இமயம் சொல்லும்!
அறிவற்று மறுமுறையும் பிதற்ற வேண்டாம்!

எந்நாளில் பார்ப்பனர்கள் வாளெடுத்தார்?
எவ்வரசின் கீழிருந்து சண்டை போட்டார்?
இந்நாளில் புல்லேந்தும் கையில் வாளை
எந்திடுவோம் என்கின்றீர்! சிரிப்பார் பெண்கள்!
செந்நீரில் குளித்தவர்கள் திராவி டர்கள்
தெரியாது பிதற்றுகின்றீர்! ஆமா உம்மால்?
இந்நீர்மை இனிவேண்டாம்! கொடுங்கோல் கையில்
இருந்தாலும் நடக்காது! திருந்து வீரே!

எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் வேண்டும்!

(தோழர் வேதாசலமவர்களின் திறப்பு விழாச்சொற்பொழிவு)

★

(சென்ற வாரத்தொடர்ச்சி)

நாம் வேண்டுவது என்ன?

உலகத்திலே நாகரிகம், கல்வி, அறிவு மிகுந்த பெரும் நாட்டினராய் அமெரிக்கர், பிரிட்டிஷார், ருஷ்யர் மற்றும் இவர்கள் போன்றவர்களும் என்ன வேண்டுகின்றனர்? என்ன விரும்புகின்றனர்? என்ன அனுபவிக்கின்றனர்? எதைத் தங்களுக்கு அவசியமெனக் கருதுகின்றனர்? எதைக் காப்பாற்றுகின்றனர்? எதைப் போற்றுகின்றனர்?

1. ஒரு நாட்டார் மற்றொரு நாட்டாரையும், ஒரு மக்கள் கூட்டம் மற்றொரு கூட்டத்தையும், ஒரு ஜாதியார் மற்ற ஜாதியினரையும், ஒரு வகுப்பினர் மற்ற வகுப்பினரையும், ஒரு மதத்தினர் மற்ற மதத்தினரையும் அடக்கி ஒடுக்கிஆளச் சட்டம் செய்யக் கீழ்ப்படிந்து நடக்கச் செய்வதையும், அடிமைப் படுத்துவதையும் எதிர்த்து ஒவ்வொரு நாட்டாரும் தாங்களே நிர்ணயம் செய்யும் அரசியல் ஸ்தாபனங்கள் மூலம் ஆண்டுகொள்ள விரும்புகின்றனர்.

2. மக்களெல்லோரும் சமத்துவ நிலையில் அரசியல், பொருள் நிலை, சமூகம் இவைகளிளெல்லாம் நியாயமாக நியாயத்துடன் நடத்தப்பட வேண்டும்.

3. எல்லோருக்கும் எல்லா இடத்திலும் சம சந்தர்ப்பம் கொடுத்தல்.

4. மதம் ஒரு வகையிலும் மக்களைத் துன்பப்படுத்தாத நிலை. அரசியலில் கலக்காத நிலை. மதம் மக்களுக்குச் சௌகரியம் செய்ய அனுமதிக்கப்படுமே யொழியத் துன்பம் உண்டாக்க விட முடியாத நிலை. (Liberty of faith and worship)

திராவிடர் கழகம் இவைகளைத் தான் வற்புறுத்துகின்றது. இவையெல்லாம் இல்லையானால் மனிதன் மனிதனாக வாழ முடியாது. இந்து மதமும், அதை நாடி நிற்கும் சாஸ்திரமும், சட்டமும், சமுதாய வாழ்க்கையும், வழக்கங்களும், சம உரிமை அளிக்கின்றதா நமக்கு? ஆண்டவன் முன்னால்கூடசமஉரிமைகிடையாதே. மதம் யாரை உயர்ந்தவர்களாகக்கொண்டதோ அவர்கள் தானே இந்த நாட்டில் பெரும் நிலக்காரர்கள், பிராமணர்களும் சைவர்களும். மதம்யாரை இழிவாகக் கொண்டதோ அவர்கள்ஆதி திராவிடர்கள். அவர்கள்தானே பரம ஏழைகள். சம நிலை, சமசந்தர்ப்பம் வேண்டும்போது இந்தச் சாத்திரமும், சட்டமும், வழக்கமும், மதத்தின் பிடியும் நீக்கப்பட்டோ, மாற்றப்பட்டோ ஆகவேண்டாமா? மதம் மக்களின் வாழ்க்கையில் நுழைந்து அவர்கள் வாழ்க்கையைச் சேதப்படுத்தாது அரசாங்கம் காப்பாற்ற வேண்டாமா? அரசாங்க உதவி பெற்றுப் பொதுப் பணத்தில் நடத்தப்படும் விவேகானந்தர் காலேஜில் 100 க்கு 97 பிராமணப் பிள்ளைகளைப் படிக்க விடுவது சமசந்தர்ப்பமாகுமா? மதத்தில் (Liberty of faith and worship) கொடுக்கப்படுவது நியாயமா? இது விஷயத்தில் ஒருவன் தன் கடவுளை வழிபட தன் உடலை வருத்துகின்றான். அதை அரசாங்கம் சட்டமூலம் தடுக்கின்றது. கடவுளைத் திருப்தி செய்ய ஒருவன் பல டின் நெய், பால், பழரசம், தேன் மற்ற உணவுப் பொருள்கள் இவைகளை வீணாக்குகின்றான். இதற்கு அரசாங்கம் அனுமதிக்கலாமா? நல்ல உணவுப் பொருள்களைச்சேதப்படுத்துவதா கடவுள் வணக்கம்? இவைகளை அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

சாதிவித்தியாசங்களை, திராவிட நாட்டில் அறவே ஒழித்து மக்களை ஒன்றுபடுத்தி மதங்களால் ஏற்படும் வெறுப்பு நீங்கின பின்னர்த்தான் உண்மை சுதந்தரம் நாட்டில் காண முடியும். ஒருவன் மற்றொருவனை பிறப்பால், ஜாதிவேறுபட்டால் கேவலமாக மதிப்பதை நிறுத்துவான். திராவிடக் கழகம் சாதிவித்தியாசங்களை அறவே ஒழிக்கவேண்டுமென்கின்றது. எல்லோரும் ஓர் குலம் என்று சொல்லி வருகின்றது. மதங்களால் ஏற்படும் வெறுப்பை நீக்க முயற்சித்து மக்களை அண்ணன் தம்பிகளாக வாழச் செய்கின்றது. ஜாதியால் உயர்ந்தவன் பார்ப்பனன். அவனே வகுப்பிலும் உயர்ந்தவன். மதத்திலும் உயர்ந்தவன் அவனே. மூவகையிலும் ஒரு சிறு கூட்டம் சிறப்புக்கொண்டால் மற்றவர்கள் தற்காப்புத்தேடவேண்டியது நியாயந்தானே. 1917-ம் ஆண்டில் பார்ப்பனரல்லாதார் இயக்கம், டாக்டர் நாயராலும் தியாகராயச் செட்டியாராலும் ஆரம்பிக்கப்பட்டது. இன்னிலை யுணர்ந்து தான் செய்தனர். சட்டசபையில் எல்லோரும் பார்ப்பனர். பல்கலைக் கழகத்தில் எல்லோரும் பார்ப்பனர். கவர்னர் சபையில் எல்லோரும் பார்ப்பனர். டில்லி சபையில் எல்லோரும் பார்ப்பனர். உத்தியோகஸ்தர் எல்லோரும் பார்ப்பனர். வக்கீல்கள் எல்லோரும் பார்ப்பனர். ஜட்ஜுகள் எல்லோரும் பார்ப்பனர். இந்த நிலையை மாற்றி அமைக்க அரும்பாடு பட்டனர். முதல் முதலாக சர். வெங்கட்டசுப்பராவ் ஜஸ்டிஸ் தேவதாஸ் இவர்களை நியமிக்கப்பட்டது. பார்ப்பனர் எதிர்த்தனர். பின்னர் சர். வெங்கட்டசுப்பராவ் சென்னை நீதிமன்றத்தில் பெரிய பதவிக்கு வந்து நல்ல பெயர் வாங்கினார். சட்டசபையில் பார்ப்பனரல்லாதார் மிகுதியாக வந்தனர். செனட் சபைக்கு நம்மவர்கள் நிறையச்சென்றனர். பார்ப்பனரல்லாத பிள்ளை ஆங்கிலப்படிப்புப்படித்து அரசாங்க உத்தியோகங்களுக்கு வந்தார்கள். நிலைமை மாறிவந்தது, ஓர்அளவிற்கு சமுதாயத்தில் நியாயமில்லையே! இன்றும் பொருள் நிலையில் நியாயமுண்டா? இல்லை, அவ்வாறேதான் அரசியலிலும் அரசியல் நிர்ணய சபையில் நம்மைப் பற்றிப்பேசுவதற்குஒருவர்கூடக்கிடையாது. மாகாணத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்தஅதிகாரங்களை மத்தியஅரசாங்கம் பெரும்பாலும் எடுத்துக்கொள்ளுகின்றது. மாகாணம் எதற்கும் மத்திய அரசாங்கத்தின் அனுமதிபெற்றே நடந்து கொள்ள வேண்டும். திராவிடன், தன் உணர்ச்சி கொண்டு தன் நாகரிகத்தையும் காத்து பெருமையோடு வாழமுடியுமா? இவையெல்லாம் நன்குணர்ந்து கழகவேலைகளை நல்லவகையில் நடத்திச் செல்ல இம் மாநாடு தகுந்த முடிவுகள் செய்யுமென்ற நம்பிக்கையுடன் இம்மாநாட்டைத் திறந்து வைக்கின்றேன்.

★

உங்களுக்குத் தெரியுமா?
தமிழ் நாட்டிலுள்ள எல்லா
முனிசிபாலிட்டிச் செய்திகளுடன்
பிரதிவாரமும் சனிக்கிழமை
வெளி வருகிற
“ஈ ரோ டு வா சி”
முனிசிபல் தமிழ் வாரப்பத்திரிகை.
(ஆசிரியர்: பி.ஷண்முகவேலாயுதன்)
4 பக்கங்கள். விலை 6 பைசா.
விரைவில் 8 பக்கங்களுடன்
ஒரு அணா விலையில் வெளிவரும்.
எல்லா ஊர்களுக்கும்
ஏஜண்டுகள் தேவை.
மானேஜர், ஈரோடு வாசி, ஈரோடு.

வாழ்க்கை ஒப்பந்தம்.

விழுப்புரம் மருதூரில் 24-5-48 ம் நாள் காலை 7-மணிக்கு தோழர் அ. இராமசாமி தோழியர் தா. பத்மாவதி ஆகிய இருவரும் நகரமன்றத் தலைவர் தோழர் மு. சண்முகம் அவர்கள் முன்னிலையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொள்ளுவார்கள். தோழர் ந. ஆறுமுகம் அவர்கள் சொற்பொழி வாற்றுவார்கள்.

ரோஜா முத்தையா

போற்றவேண்டியது யாரை?

"வாலறிவன்"

★

மாநிலத்தில் மாபெருந் துன்பம் யாதென்ன எண்ணினான். பச்சிலை போட்டும் ஆறாத கட்டியை மருத்துவன் அறுக்கக் கண்டான். அறுபட்ட நோயாளி துடிதுடித்து அழுதலறும் சத்தத்தைக் கேட்டான். புடம் வைத்த கால் வாளாலறுக்கப்படுவதைக் கண்டான். அதனால் வாதையுறும் வறியரைக் கண்டான்.

வாளாலறுபடும்போது ஏற்படும் வாதையே பெரும் வாதையென உணர்ந்தான். உணர்ந்தான் உலகத்தில் பெரும் துன்பம் யாதென. உணர்ந்தவன் அதை நீக்கும் எண்ணம் கொண்டானில்லை. தன்னால் அவ்வின்னலைத் துடைக்கவியலாதென எண்ணினான். இறைவனை அடைக்கலம் அடைதலே அல்லலுக்கணை கோலுதலாகும் எனத்துணிந்தான். எனவே பாடினான்,

"வாளாலறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா-நீ
ஆளா உனதருளே பார்ப்பனடியேனே"

என்ற பாட்டை. யார் பாடியதிதனை?

கொன்னவிலும் கூர்வேல் குலசேகரன் பாடியது.

உவமையழகுமிளிரும் தண்டமிழ்ப் பாட்டுத்தானாயினும் தமிழர் தம்பண்பாடு வேய்ந்த பாட்டல்ல அது. என்? அல்லலுக் கஞ்சி ஆண்டவனை அடைக்கலம் புகார் தமிழர். இன்னல்வரின் ஈசனை நாடி, அவன் புகழ்பாடி, அழுதிடும் அறிவிலிகள் அல்லர் அவர்கள். அதுமட்டுமல்ல. 'கடவுளால் ஆகாதது என்றால்கூட நீ கவலைப் படாதே. உன்னாலான மட்டும் முயற்சி செய்துழை. அதற்கேற்ற பயன் கிடைக்கும்', என்ற முன்னேற்றத்திற்குகந்த, முயற்சியைத் தூண்டும், அறிவை அகலப்படுத்தும் கொள்கையர். அதுமட்டுமா? 'இன்னலொடுதான் இவ்வுலகில் ஒரு மனிதன் வாழவேண்டும் என்பது ஆண்டவனின் ஆணையென்றால் அத்தகைய ஆண்டவனே அழிந்தொழியட்டும்' என்றுரைக்கும் உரமுடையோர். எனவே இன்னல் நீங்க இறைவனை நாடுதல் தமிழர் தம் பண்பாட்டுக்கு மாறானது என்பது பெறப்படுகின்றது.

ஆகவே, அல்லலைக் கண்டவிடத்து அதனை அணைக்கும் ஆற்றல் வாய்ந்தவர் தமிழர். துன்பம் கண்டவிடத்து அதனைத் துடைக்கும் துணிவினர் தமிழர். இடுக்கண் வரினும் அதனை நகுகின்ற இயல்பினா அவர்கள். ஆகையினால் தான் உலகில் முதன் முதலில் காடு வெட்டி நாடுண்டாக்கியவர் நம்மவர். கால் வெட்டி நீர் பாய்ச்சி நிலந்திருத்தி விதைத் தூறத்து விருந்துண்டவர் நம்மவர். கனிமொழி கண்டு காவியமியற்றிக் களித்தவர் நம்மவர். அய்யாயிரமாண்டு கட்கு முன்னரே உலகிலே மற்ற மக்கள் காட்டு விலங்குகள் போல் உழன்று கொண்டிருந்த பொழுதே புற்றரைகளுக்காகப் புதர்களிலும், மலைகளிலும் ஆரியர் அலைந்து திரிந்து கொண்டிருந்த பொழுதே வளப்பமிகு மொகஞ்சதாரோவின் நாகரீகத்தொடு வாழ்ந்தவர் நம்மவர். சான்றாக ரிக்வேதமும் தாசர்கள் (ஆரியர் நம்மனோரைத் திமிரால், அழுக்காறால், கொழுப்பால் இவ்வாறழைத்தனர்) மாட மாளிகைகளில் மகிழ்ச்சியொடு வாழ்ந்தனர் என்று புகல்கிறது.

இடைக்காலத்தே வந்து புகுந்தது ஆரியம். வருண பேதமெனும் வாள்கொண்டு துண்டிக்கப்பட்டது பல்வேறு சாதிகளாகப் பாங்கொடு வாழ்ந்த தமிழினம். சுயநலத்தால் ஆரியரே சிரிய சாதியினராயினர். நம்மவர் அவர்க்கே அடிபணிந்துழைக்கலாயினர். 'உலகம் பொய்' என்றனர். உண்மை என்று கொண்டனர் நம்மவர். 'அவனி வாழ்வு அநித்யம்' என்றனர். 'அது சரியே' என்றனர் அறிவிழந்த திராவிடர். 'மக்கள் தம் மழலையும், மங்கையின்பமும் மாயை' என்றனர். மதித்தனர் அச்சொற்களை. 'எனவே இப்பொய்யுலக வாழ்வை விட்டு அய்யன் வாழும் மெய்யுலகடைதல் வேண்டும்' என்றனர். 'அதற்கு யாது செயல்வேண்டும்' என்று வினவினர் தமிழர். 'ஆண்டவனின் பிரதிநிதிகள் நாங்கள். மாநிலத்து மகாதேவர்கள் நாங்கள். எங்களுக்குப் பணிபுரியுங்கள். இருக்கும் பொருளை அறவழிச் செலவிடுங்கள். அறம் பெற அருகதையுடையவர் யாமே. எமக்கீதலே ! நீங்கள் இறைவனைத் திருப்தி படுத்தும் வழி; என்றனர். அவ்வாறே இருந்ததை யெல்லாம் கோதானம், பூதானம் என்று நிதானமில்லாது வாரிக்கொடுத்தனர் அவ்வாரிய வஞ்சகர்க்கு. தாழ்ந்தனரதனால். துன்பத்தால் துவைக்கப்பட்டனர். இடுக்கணால் இடிக்கப்பட்டனர். 'துயருறுகின்றோமே' என்று கேட்டால், 'ஆண்டவன் ஆணை, அய்யன் சோதனை, விதியின் விளைவு' என்று கூறித் தங்களின் சதிச்செயலை மறைத்தனர். "கடவுளைத்தொழு! கடமையைச்செய்! பயனைப் பரமனின் சித்தத்திற்கு விட்டுவிடு!" என்று நீதியுரைகள் புகன்றனர்.

துன்பம் ஆண்டவனைத் தொழுவதால் துடைக்கப்படும் என்ற கொள்கையைப்பரப்பி, பார்ப்பனர் வாழ்வு வளமுறுவதற்குத் தானே மேற்கண்ட சேரனின் பாட்டும் உதவுகிறது. 'மீளாத்துயர்தரினும் உனக்கே தான் ஆளாவேன்' என்கிறார். 'வாளாலறுத்துச்சுடினும் மருத்துவன் பால்மாளாதகாதல் நோயாளன் போல், என்று கூறுமிடத்து வாளாலறுக்கப்படுவதை அவர் கண்டிருக்கிறார் என்பது தெரிகிறது; அது விளைக்கும் பெருந்துன்பத்தையும் பார்த்தும், உணர்ந்துமிருக்கிறார் என்பதும் தெரிகிறது; அத்தனையும் உணர்ந்த அவர் வாளாலறுபடும் போதுண்டாகும் வாதையைப் போக்குதல் இயலாது என்ற முடிவுக்கு வந்துவிட்டார் என்பதும் தெரிகிறது. ஆதலால் தான் பெருந்துன்பத்திற்கு வாளாலறுத்துச் சுடுதலை யுவமையாக்கி, ஆண்டவனுக்கு மருத்துவனை உவமையாக்கிப்பாட்டையே இயற்றி விட்டார்.

துன்பத்தைக் கண்டு அதைத் துடைக்கும் துணிவில்லாத, முயற்சிக்காத ஒருவன் ஆழ்வார் என்றழைக்கப்படுகிறான். மக்களினத்தை மீட்க வந்த மாண்புடை

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

குடி அரசு

22—5—48 சனிக்கிழமை.

தலைமை தரும் தெளிவு!

தூத்துக்குடியில் நடந்த 18வது மாநாடு, திராவிடர் புரட்சித் திருநாள் ஆகும் என்று காட்டி, பெரியாரவர்கள் தலைமைப்பேருரையில் விளக்கி வலியுறுத்திய "திராவிடர் கழகம் ஒரு பிரச்சார இயக்கம்" என்கிற ஒரு கருத்தையும் சென்ற வாரத்தில் குறிப்பிட்டிருந்தோம்.

தலைமைப் பேருரையில் பெரியாரவர்கள் விளக்கிக் கூறிய கருத்துக்கள் பல உண்டென்றாலும், இப்பொழுது அவற்றில் சிலவற்றையாவது இங்கு தோழர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

பெரியார் அவர்கள், தம்முடைய தலைமை உரையை ஆரம்பித்தவுடனே, முதலில் முக்கியமான விஷயமாக எடுத்துக் கொண்டது காந்தியாருடைய படுகொலையை. மாநாட்டில் முதல் தீர்மானமாக நிறைவேறியதும் காந்தியாருடைய படுகொலைக்கு அநுதாபமே. மாநாட்டில் திறந்து வைக்கப்பட்ட படங்களுள் காந்தியார் உருவப் படம் ஒன்று, அதுவும் பெரியாராலேயே திறந்து வைக்கப்பெற்றது.

மாநாட்டில் மட்டுமல்ல. காந்தியார் இறந்த செய்தியைக் கேட்டவுடனே உண்மையில் வருத்தப்பட்டவர்களும், இது ஈடுசெய்ய முடியாத இழப்பு என்று ஏங்கியவர்களும், இப்படுகொலைக்கு உண்மையான காரணம் இதுவென விளக்கியவர்களும், லட்சிய வாழ்வில் அவருக்கு நேர்ந்த முடிவைக் கேட்டு உண்மையில் பொறாமையுற்றவர்களும் திராவிடக் கழகத்தார்தான் என்றால் இதை அறிவும் நியாய உணர்ச்சியுமுடைய எவரும் மறுக்கமாட்டார்கள்.

அப்படியிருந்தும், "படுகொலைக்கு முன்னால், குறைகூறிக் கண்டித்துப் பழகியவர்கள் படுகொலையைக்கேட்டு ஏன் நீலிக்கண்ணீர் வடிக்கவேண்டும்?" இப்படிக்கேட்டன—கேட்கின்றன சில தேசியச் சிறுத்தைகள். "கள்ளனுக்கு ஓடுமாம் திருட்டுப் புத்தி", என்பதுபோல நீலிக்கண்ணீர் வடிக்கின்றவர்களுக்குப் பிறர் வருத்தமும் நீலிக்கண்ணீராகப், பொய்ம்மையாகத் தோற்றுவதில் வியப்பொன்றுமில்லை.

காந்தியாரைக்குறை கூறினோம், வெறுத்தோம், கண்டித்தோம், பகிஷ்காரமும் செய்தோம். ஏன்? காந்தியார் மறைவின் பின் அவர் மறைவுக்காக, படுகொலைக்காக வருந்துகிறோம், அச்செயலைக் கண்டிக்கிறோம், அவரைப் புகழுகிறோம். ஏன்?

இதைத் தேசியச் சிறுத்தைகளோடு, திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று தங்களைச் சொல்லிக்கொண்டு, உண்மையிலேயே கழகத்தின் அடிப்படையையோ, சுயமரியாதையின் தத்துவத்தையோஉணராத அரைகுறையான திராவிட இளைஞர்களும் சிந்திக்க வேண்டும்.

காந்தியார் அவர்களை நாம் வெறுத்ததற்குப், பகிஷ்கரித்ததற்குக் காரணம் அவர் பரப்பி வந்த காந்தீயம். வாழ்வில் மாற்றமின்றிப் பெயரில் ஆதித் திராவிடர் எப்படி அரிஜனர் ஆனார்களோ அதைப் போலவே, முறையிலும் பயனிலும் மாற்றமின்றிப் பெயரில் வருணாச்சிரமம் காந்தீயமாயிற்று. அந்தக் காந்தீயத்தை, வருணாச்சிரமத்தை நாம் அன்று கண்டித்தது மட்டுமல்ல, இன்றும் கண்டிக்கிறோம். இனி அது உயிர்ப்பிக்கப்பட்டாலும் வேறு எந்தப் பெயரை எப்பேர்ப்பட்டவர்களால் கொடுக்கப்பட்டாலும், அறிவுடைய எவராலும் அது கண்டிக்கப்பட்டே தீரும்.

மேலும்நாம் காந்தீயத்தைக் கண்டித்தவர்கள் என்பதிலே, காந்தியார் எட்டுத் திசையும் புகழ்பரப்பி உயிருடன் உலாவிய காலத்திலேயே காந்தீயத்தை வெறுத்த திராவிடர்கள் என்று வரலாற்றில் எழுதப்படுவதிலே, நாம் உண்மையாகப் பெருமையடைகிறோம்; ஏன்? இன்றுள்ள அஞ்ஞானம் அதைக் கேலி செய்யினும், எதிர்கால விஞ்ஞானம் பெருமைப்பட முடியும் என்று உறுதியால். உண்மையும் பயனுமுடையவைகளே உலகில் நெடுநாள் நிற்கமுடியும், பொய்மையும் பயனில்லாதனவும் விரைவில் பட்டொழியும் என்கிற நம்பிக்கையால்.

காந்தியார் அவர்களின் மறைவைக் கேட்டதும் மனம் துடித்து, அவர் மறைவுக்கு ஆக வருந்தி, இன்று அவர் பெயரைத் திராவிடர்களின் நெஞ்சில் நிலை நாட்டி, திராவிடர்களுக்கு இந்த மறைவு மிகப் பெரிய நஷ்டம் என்று கூறி அவரைப் புகழுகிறோம் என்றால், அது அவர் பரப்பி வளர்த்த காந்தீயத்திற்காக அல்ல! வருணாச்சிரமம் வாழ வேண்டும் என்று வழி வகுத்ததற்காக அல்ல! தக்ளிக்கும் ராட்டைக்குமல்ல! அல்லது உரலுக்கும் உலக்கைக்காகவுமல்ல! பின் ஏன்?

பெரியார் அவர்கள் விளக்கியிருப்பதையே இங்கு எடுத்துக் காட்டினால் போதும்.

சனாதனம் தழைக்கக் காந்தீயம் என்ற பெயர் கொடுத்து, அதை வளர்த்து வந்த காந்தியார், தம்முடைய படுகொலைக்குச் சில நாட்களுக்கு முன்னாலேயே,

(1) பார்ப்பனீயத்தால் "மகாத்மா" என்று பார்புகழும் நிலை பெற்றாலும், தான் ஒரு சூத்திரன் சூத்திரனே என்பதைத் தெரிந்து கொண்டார்.

(2) இந்துமதமோ, இந்தியாவோ, இந்தியரோ என்பதாக ஒன்றும் இல்லை. சிந்து நதியால் ஏற்பட்ட பெயர்தான் இந்து என்பதும் இந்தியா என்பதும் என்று விளக்கம்கூற ஆரம்பித்தார்.

(3) இந்து—முஸ்லிம் ஒற்றுமைக்குத் தடையாயிருப்பது மத உணர்ச்சி. தீண்டாமை—அரிஜன் என்பது இந்த மத உணர்ச்சி இருக்கும்வரை மாற்றமடைய முடியாது. ஒரே கடவுள் தான் உண்டு என்றும் வற்புறுத்தத் தலைப்பட்டார்.

(4) இந்து மதம் இந்துக்கள் என்பவர்களுக்கு மிருக உணர்ச்சியை ஊட்ட, அதன் பயனால் இன்று எண்ணற்ற முஸ்லிம்கள் கொலைக்கும் கொள்ளைக்கும் உள்ளாகி அனாதைகளாகினர். முதலில் இதற்குப் பரிகாரம் காணாமல் வேறு ஒரு காரியமும் செய்ய என்னால் இயலாது என்று கூற ஆரம்பித்தார்;

ஓ. எம். சுப்பிரமணியன்

(5) மற்றவர்களைத் தாழ்ந்த ஜாதியாக்கி, உடலுழைப்பு வேலையைமேற்கொண்டு உழைத்துழைத்துச் சாவதே அவர்களின் தருமம் என்றுகூறி, தாங்கள் உழைக்காமலே உழைத்த உழைப்பின் பயனை வஞ்சித்து உண்டுவரும் கொடுந்தன்மையை—பார்ப்பனர்களின் உண்மையான தன்மையைத் தெளிவாய் அறிந்து கொண்டார்.

(6) ஒருநல்ல தகுதியில் கொஞ்சம்கூட இல்லாதவர்கள் எல்லாம், காந்திக்கு ஜே! என்று தன் பெயரைச் சொல்லிக் கொண்டு, இன்று பதவியில் உட்கார்ந்து கொண்டு அடிக்கும் கொள்ளையை, லஞ்சத்தை, டாம்பீகப்போலியான எத்து வாழ்வைத் தெளிவாகத் தெரிந்து கண்டிக்க ஆரம்பித்து விட்டார்.

(7) இந்துமதம், பார்ப்பனீயம், காங்கரஸ் ஆகிய இவைகளைக் கண்டித்தது மட்டுமல்ல, அவற்றிற்குப் பரிகாரம் செய்ய வேண்டியது மிகவும் அவசியம் என்று சொல்லிப் பரிகாரத்தில் பிரவேசித்ததினால்தான், அந்தப் பரிகாரம் அவரால் செய்யப்பட்டே தீரும் என்று பார்ப்பனர்கள் நம்பியதினால்தான், பார்ப்பனர்கள் அவரைக் கொன்றொழிக்கத் திட்டம் தீட்டி வெற்றியும் பெற்றார்கள்.

(8) உண்மையை உணர்ந்த காந்தியார், குறைகளுக்குப் பரிகாரம் காணமுனைந்த காந்தியார், அவர் சொல்லிக் கொண்டிருந்தது போல 125 வயதுவரை இல்லாது போனாலும், இன்னும் சில காலம் உயிரோடிருப்பாரானால், பார்ப்பனீயத்தின் கொடுமையை நெடுங்காலத்திற்கு முன்னாலேயே யறிந்து, அக்கொடுமை அழிந்தால் தான் மனிதன் மனிதனாக வாழமுடியும் என்று விளக்கி வந்த நம்மைப் பாராட்டுவதுடனில்லாமல், சூத்திரர்களாக வாழோம் என்ற நம் லட்சியம் நிறைவேற, நாடு பிரிய வேண்டும் என்ற நம் கோரிக்கை நிறைவேறப் பாடுபட்டிருப்பார் என்பதும் உறுதி.

இப்படியாகக் காந்தியார் தம் பழைய போக்கிலிருந்து மாறுபட ஆரம்பித்ததினால்தான், இம் மாறுபாடு திராவிடர்க்கு நன்மையைவிளைவிப்பதோடு, மனிதகுலம் தழைப்பதற்கே மார்க்கமானது என்கிற அசைக்க முடியாத உறுதியினால் தான் அவருக்காகத் திராவிடர்கள் வருந்துகிறார்கள்.

இதனைச் சுருக்கமாகப் பெரியார் அவர்கள் விளக்கினார்கள், வாழ்ந்த காந்தியார் வேறு, மறைந்த காந்தியார் வேறு என்று.

இந்த உண்மையைத் தேசியச் சிறுத்தைகள் உணர மறுத்தாலும், நம் திராவிட இளைஞர்கள் தெளிவாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

திராவிடக் கழகத்தாருக்கு உலகத்தில் எவர்மீதும் வெறுப்போ, துவேஷமோ இல்லை. சுயமரியாதைக்காரர்கள்—திராவிடக் கழகத்தார்கள் கண்டிப்பது, குறைகூறுவது எல்லாம், அக்கிரமமும் அநீதியும் கொடுமையும் குரூரமும் நிறைந்த கொள்கைகளைத்தான்.

'குற்றம் செய்பவன், சந்தர்ப்ப உதவியினாலும் சூழ் நிலைக்காரணங்களாலும் குற்றம் செய்கிறானே தவிர, குற்றம் புரிவதே எவனொருவனுக்கும் இயற்கை இல்லை என்பதை உணர்வதும், குற்றஞ் செய்தவனே குற்றத்தையுணர்ந்து அதற்குப் பரிகாரம் காண முயலுவானானால் அப்போக்கை வரவேற்று அதற்கு உதவி புரிவதே மனிதர்களின் கடமை என்பதை உணர்வதும், அவன் மக்கட் சமுதாயத்தில் தலை நிமிர்ந்து வாழத் தகுதியுடையவன் என்பதை யறிந்து கடைப்பிடிப்பதுமே சுயமரியாதை இயல்புகளில் ஒன்று.

வெறுப்பைவிளைவிக்கும்கொள்கையை மேற்கொண்டவன் அழிந்துபட வேண்டும், அழிக்கப்பட வேண்டும் என்பதைச் சுயமரியாதைக்காரன் விரும்பான். வெறுப்பை விளைவித்து விபரீதத்தைப் பெருக்கும் கொள்கைகள் பட்டொழியவேண்டும் என்பதைத் தான் விரும்புவான்.

மாறுதலுக்கு உள்ளாவதும், உட்படுவதுமே உலகப் பொருள்களின் இயற்கை. காலம் மாற மாற, அநுபவம் முதிர முதிர மனிதன் தன் எண்ணத்தைச் செயலைமாற்றிக்கொள்கிறான். மாறுதலுக்கு ஆளாகாத மனிதன் எவனுமில்லை. அது இயற்கையுமல்ல. காலம், அநுபவம் திருப்பும் மாறுதலை விரும்பாதவன், மனிதத் தன்மையில் குறைந்தவன் என்பதே சுயமரியாதைக்காரனின் உறுதி.

சநாதனத்திற்குக் காந்தீயம் என்ற போர்வையைப் போர்த்திய காந்தியார் தன் தவறையுணர்ந்தார். தானே அதை மாற்றியமைக்க வேண்டுமென்று விரும்பி அதற்குப் பாடுபட முயன்றார். அவருடைய உழைப்பின் ஆரம்பத்தில் முளைத்ததுதான் காந்தீயம். அவருடைய உழைப்பின் கடைசியில் முளைத்ததுதான் இந்த மாறுபாடுகள். காந்தீயத்தைக் காட்டிலும் அவரிடமே முளைத்த இந்த மாறுபாடுகள் பெரும் வலிமையுடையது. இந்த உண்மையைத் தான் திராவிடர்கள் "முன்னால் முளைத்த காதைக்காட்டிலும் பின்னால் முளைத்த கொம்பு வலிமையுடையது" என்பார்கள்.

ஆகவே காந்தியாரை நம் கழகம் போற்றுவதற்குக் காரணம், இருந்திருந்தால் நன்மையாய் இருக்குமே என்ற நம்பிக்கையாலும், அந்த நம்பிக்கையை அவரின் கடைசிச் செயல்கள், பேச்சுகள் வற்புறுத்தியதாலுமே யல்லாமல், அவர் நமக்குப் பெரும் நன்மையைச் செய்தவர் என்பதாலோ, அவர் மறைவுக்கு வருந்துவதால், அவரைப் போற்றுவதால் நமக்கு எந்த விதமான லாபமும் கிடைத்துவிடும் என்கிற நம்பிக்கையினாலோ அல்லவே அல்ல.

காந்தியார் அவர்களின் இந்த மாறுதலை அடிப்படையில் வைத்துத்தான், பெரியாரவர்கள் இந்த நாட்டிற்குக் காந்தி நாடு என்றும், இந்து மதத்திற்குக் காந்தி மதம் என்றும், இந்துக்களுக்கு மெய்ஞானிகள் என்றும் பெயர் மாற்றி, வர்ணாச்சிரமத்தைக் கருவறுக்கத் திட்டம் தந்தார்கள்.

பெரியாரவர்களின் இந்தத் திட்டத்தைக் கேட்டவுடனே, பார்ப்பனீயம் பயந்து நடுங்கியது. தேசியம் பல்லிளித்துப்பின்வாங்கியது. காங்கரஸின்உண்மைச்சுயரூபம் வெளியானது. இந்தக் கூத்து ஒருபுறம் இருக்க, நம் திரவிட இளைஞர்களிற் சிலர் மறுபுறம் ஆத்திரப்பட்டார்கள். இந்தியா காந்திநாடு என்று ஆனால், நம் திராவிட நாட்டுப் பிரிவினை என்னாவது? திராவிட நாடு திராவிடருக்கே என்ற உரிமையுணர்வைக் காற்றிலா பறக்கவிடுவது? வெள்ளத்திலா கரைத்துவிடுவது? என்று பொறுமினார்கள். இதை நாம் அறிவோம்.

இந்தியா, காந்திநாடு என்றும் இந்து மதம், காந்திமதம் என்றும் மாறுவதினால் அல்லது மாற்றப்படுவதினால், திராவிட நாட்டுப்பிரிவினைக்கு எவ்விதத்திலும் தடையிருக்க முடியாது. வேண்டுமானால், பிரிவினை பெற்ற திராவிட நாட்டில் எந்த எந்த நல்ல கொள்கைகள் அமுலாக்கப்பட்டு விளங்குமோ, அவைகளே இப்போதையு

இந்திய யூனியன் முழுதும்நிலவுவதற்கு வழியாயிருக்க முடியும். இதை எந்தச் சுயமரியாதைக்காரன் தான் விரும்ப மாட்டான் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

திராவிடர்கள் என்பதில், மனிதத் தன்மைக்கு மேலான வேறு ஏதோ ஒரு தன்மையிருப்பதாக, அல்லது பெருமை இருப்பதாக எண்ணிக், கர்வமோ, செருக்கோ கொள்ளும் இயல்பு சுயமரியாதைக்காரன் எவனுக்குமில்லை. திராவிடன் என்று பேசுவதெல்லாம், மனிதத்தன்மை இழந்து மனிதனை மனிதன் பகைத்து வாழும் மண்மூடவேண்டிய கொள்கையை, மண்மூடுவதற்காகக் கருவியாகக் கொண்டிருக்கிறோம் என்பதல்லாமல், இன்றைய நிலைமைக்கு இந்நாட்டுப் பழங்குடி மக்கள் உலகத்தோடு ஒட்டி முன்னேறுவதற்கு இந்த இனப்பெயர் தவிர வேறு பெயர் நாம் காணவில்லை என்பதல்லாமல், இப்பெயர் வரலாறு காணாத காலத்திற்கு முன்பிருந்தே வழங்கி வந்திருக்கும் உரிமைப் பெயரோடு உண்மைப் பெயருமாகும் என்பதல்லாமல் வேறு தெய்வீகமோ, மகாத்மியமோ இப்பெயரில் இல்லை என்பதைச் சுயமரியாதைக்காரன் உணர்வான்.

இந்திய யூனியன் எப்பெயர் பெற்றாலும், திராவிடநாடு மட்டுமல்லாமல், ஆட்சியின் வலிமைக்கும் நன்மைக்குமாகப் பல பிரிவுகளாக, பல நாடுகளாக இந்திய யூனியன் பிரிந்தே ஆகவேண்டும் என்பதுதான் நம் விருப்பம். இந்த உண்மையைக் குறித்துப் பெரியார் அவர்கள் தலைமையுரையில் விளக்கியிருக்கும் பகுதியை அப்படியே இங்கு தருகிறோம்.

"ஒரு மாகாணம் தான் ஒரு நாடாய் இருக்கவேண்டுமே ஒழிய ஒரு கண்டம் 2000 மைல் நீளம் 1500, 2000 மைல் அகலம் கொண்ட ஒரு பெரும் தேசம் ஒரு நாடுஆகக்கூடாது. இதுதான் பரிசுத்தமானதேசீயம் (நேஷனலிசம்) என்பதாகும்.

ஆகவே, பெறுவோம் திராவிடம் என்ற நம் திட்டத்தில் சிறிதும் பேதமில்லை. இதை வற்புறுத்துவதுதான் மாநாட்டில் நிறைவேறிய 5வது தீர்மானம்.

அது, "திராவிட நாட்டைத் தனிச் சுதந்தர நாடாக்குவதே திராவிட மக்களின் முடிவான அரசியல் கோரிக்கை என்பதை இம் மாநாடு வலியுறுத்துகின்றது" என்கிற தீர்மானம்.

இந்தத் தீர்மானம், காந்திநாடு என்பதைக் கேட்டு, அதனால் விளையும் பயனைச் சிந்திக்காமல், அவசரப்பட்டு ஆத்திரப்பட்டவர்களுக்கும், வாய்மூடி மௌனிகளாய் நின்றவர்களுக்கும், ஆத்திரத்தைத் தணித்து மௌனத்தைக் கலைக்க உதவியாக இருக்குமென்று நம்புகிறோம்.

அரசியல் நிர்ணய சபை நாடகத்தைக் குறித்தும் பெரியாரவர்கள் தம்முடைய தலைமையுரையில் தெளிவுபடவிளக்கியிருக்கிறார்கள். எதிர்கால அரசியலை நிர்ணயிப்பதற்காக, நம்மை ஆளும் ஆட்சிமுறை எப்படி இருக்க வேண்டும் என்பதை வகுப்பதற்காக, காங்கரஸ் மேலிடத்தாரின் ஆணைப்படி இன்று கூடியிருப்போர் வகுக்கும் திட்டம் நம்மை எப்படிப் பாதிக்கும்? நாம் அதற்கு எப்படிக் கட்டுப்பட முடியும்? நம் பகுதியிலிருந்து போனவர்கள் நாட்டுக்குடையவர்கள் என்கிற உணர்ச்சி சிறிதும் இல்லாதவர்களாய், "பரதேசி" யுணர்ச்சியுடையவர்களாய் இருக்கிறார்களே என்பதை எண்ணி எண்ணி ஆத்திரப்பட்ட தோழர்களுக்குப் பெரியாரவர்களின் விளக்கம் தெளிவைத்தந்திருக்கும்.

இந்தத் தெளிவை, மாநாட்டில் நிறைவேறிய ஆறாவது தீர்மானம் வலியுறுத்தி நம்தோழர்களுக்கு உறுதியையும் கொடுத்திருக்கும் என எண்ணுகிறோம்.

இந்திய அரசியல் நிர்ணசபை என்ற பெயரால், டில்லியில் கூடுகின்ற சபை திராவிட மக்களின் பிரதி நிதித்துவம் பெற்றதல்லவென்றும், திராவிட மக்களை எவ்வகையிலும் கட்டுப்படுத்தக் கூடியதல்ல வென்றும் தூத்துக்குடி மாநாடு சங்கநாதம் செய்து விட்டது.

அரசியல் நிர்ணயசபை திராவிடர்களுக்குப் பொறுப்புடையதல்ல! நிர்ணயிக்கும் திட்டத்தைத் திராவிடர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்! என்று ஒன்றரை லட்சம் பேர் கட்டியிருக்கும் முடிவை மற்றையத் திராவிடர்களும், தேசியத் தோழர்களும் நன்றாக ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

மாநாட்டில் நிறைவேறியிருக்கும் தீர்மானங்களுள் இது ஒருமிக மிக முக்கியமான, அவசரமாகச் செயலுக்குக் கொண்டு வரும் கட்டாயத்திலுள்ள தீர்மானமாகும்! அ. நி. சபை வகுத்திருக்கும் திட்டம் எப்பொழுது இந்நாட்டில் அமுலுக்குக் கொண்டு வரப்படுமோ, அப்பொழுது அந்தத் திட்டத்தைத் திராவிடர்கள் பகிஷ்கரிப்பார்கள்! அந்தத் திட்டம் செயலுக்கு வராமலிருக்க என்னென்ன விலை கொடுக்கவேண்டுமோ, அவ்வளவையும் கொடுத்து அதைத் தடுக்கத் திராவிடர்கள் தயார்! உண்மையிலேயே ஜனநாயகம் என்று பேசுவதற்கு தடிநாயகம் என்று அர்த்தமில்லை எனக் காங்கரஸ் பெருந்தலைகள் நினைக்குமானால், இந்த அரசியல் நிர்ணய நாடகத்தை ஒத்திவைத்துவிட வேண்டும்!

இந்த உண்மையைத்தான் இந்த 6வது தீர்மானம் வற்புறுத்துகிறது. அது மட்டுமல்ல! ஏதாவது ஒரு போராட்டம்! போராட்டம்! என்று கூறித் தோள்கள் தினவெடுத்தவர்களாய் நிற்கின்ற திராவிட வீரர்களையும், வீராங்கனைகளையும் தயாராகிக் கொள்ளுங்கள்! என்று எச்சரிக்கை விடுவதுமாகும் இந்தத் தீர்மானம்.

அரசியல் நிர்ணயத் திட்டத்தை பகிஷ்கரிப்போம்! அது இங்கு எமக்குத் தேவையில்லை! என்கிற இந்த முழக்கம், கேளாக்காதரைத் தலைவராகக் கொண்டு—கேடு விளைவிக்கும் கும்பலுக்குக் காதில் ஏறாது! எப்படியும் திணித்து விடவே முயற்சிப்பார்கள்! முயற்சியை எதிர்ப்பின் கையில் கிடைத்த எதைக் கொண்டாவது தாக்கத்தான் செய்வார்கள்! இதைப் பட்டநுபவித்த திராவிடர்கள் உணராதவர்கள் அல்லர். உணர்ந்தே இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். இதை ஆளும் கூட்டம் அவசியம்புரிந்துகொள்ளவேண்டும் ஆனால் புரிந்து கொள்வார்களா?

பெரியார் உடல்நிலை.

தூத்துக்குடியிலிருந்து உடல் நலிவோடு வந்த பெரியாரவர்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு 16தேதி கோயமுத்தூர் சென்று ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதைத் தோழர்கள் அறிந்திருக்கலாம்.

டாக்டர்கள், நாணுக்குட்டி நாயர் டி. எம். ஒ., கல்யாணராமன் ஆகிய இருவரும் கவனித்து வருகின்றனர்.

காய்ச்சல் ஓரளவு குறைந்திருக்கின்றதென்றாலும் இன்னும் பூரண சௌகரியமாகவில்லை. இவ்வாரத்திய சுற்றுப்பிரயாணத் திட்டங்கள் கேன்ஸல் செய்யப்பட்டிருக்கிறது.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

யோன் என்று மதிக்கப்படுகிறான். கடவுளைக் கண்ட கண்ணியன் என்று கருதப்படுகிறான். இத்தகைய மனப்போக்கு இந்நாட்டில் திகழுமட்டும் எங்ஙனம் நாம் தாழ்நிலையிலிருந்து மேனிலைக்கு ஏறவியலும்? அல்லலை யகற்றி ஆனந்தத்தை எவ்வாறு நாம் அடைய முடியும்? அடிமை யகற்றி உரிமை பெற்று எவ்வாறு உவகையோடுலாவ முடியும்?

எனவே நாட்டிடைக் காணும் நலிவுகளை நசுக்க நாடொறு முழைத்த நல்லறிஞர்களைப் போற்றுதல் செய்வோமினி! போற்றி அவர்தம் அடிகளைப் பின்பற்றுவோம்! அத்தகைய நல்லறிஞர்களில் ஒருவன்தான் யங்-சிம்ப்ஸன்.

யங் சிம்ப்ஸன்—ஆஹா! எவ்வளவு இனிக்கிறது அந்தப் பெயரை நாவினால் நவிலும்போதே. அப்பெயர் குறிக்கும் மனிதனை நினைக்கும்போதே எனதுள்ளத்தில் உவகை வெள்ளம் பொங்கி வழிந்தோடுகிறது. மனம் இன்பத்தால் பூரிக்கிறது. யாரவன்? 'க்ளோரபார்ம்! எனும் வியத்தகு மருந்தினை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட யங் சிம்ப்ஸன்.

அவனுந்தான் குலசேகரன் போல வாளாலறுபடும்போது வாதையுறும் மக்களைக் கண்டான். அதற்காக அவன் ஆண்டவனை அடைக்கலம் புகவேண்டும் என்று எண்ணவில்லை. இவ்வவதியைப் போக்கியே தீருவேன் என்று றுதி கொண்டான். தன்னறிவில் நம்பிக்கை வைத்தான். முயன்றான். முடிவில் வாகை சூடினான். க்ளோரபார்ம் என்ற மருந்தினைக் கண்டுபிடித்து.

குடலிலே கோளாறு. கொடுக்கிறான் க்ளோரபார்ம். கிழிக்கிறான் வயிற்றை. சரிப்படுத்துகிறான் குடலை. பிறகு கிழித்த வயிற்றைத் தைக்கிறான். அவ்வளவும் நோயாளிக்கு ஒரு துன்பமும் தராது நிறைவேறுகின்றன. யாரால், எதனால்? யங்சிம்ப்ஸனால், அவன் கண்டுபிடித்த குளோரபாரத்தினால். காலிலே புடம்வைத்து விட்டது. காலை வெட்டினால் தான் உயிர் உடலில் தங்கும். கொடு! க்ளோரபார்மை. வெட்டு! காலைப்பக்குவமாக. நோயாளிக்கு ஒரு சிறிதும் துன்பம் தரப்படாமலே வெட்டப்படுகிறது. பிறகு பிழைக்கிறான் சாகவேண்டியவன். வீங்குகின்றன விரைகள். அசிங்கம்; அவஸ்தை; தொல்லை; துன்பம். க்ளோரபாரம் கொடுக்கப்படுகிறது. மருத்துவனின் கத்தி வேலை செய்து மருந்து பூசப்படுகிறது. தொங்கிய அண்டம்சுருங்கி விடுகிறது. காசநோய்க் கிருமிகள் எலும்பின் ஒரு பாகத்தில் குடியேறிவிட்டன. விட்டு விட்டால் எலும்பெல்லாம் பரவி மனிதன் மயானம் அடையவேண்டியதுதான். எக்ஸ்ரேயால் வால்கிருமிகள் எங்கு குடியேறியிருக்கின்றன என்று தெரிந்து கொள்கிறார்கள். பிறகு க்ளோரபாரம் கொடுக்கப்படுகிறது. அப்பாகம் மட்டும் துண்டிக்கப்படுகிறது. நோய் பரவுதல் இவ்வாறு தடுக்கப்படுகிறது. மனிதனும் மாநிலத்தில் வாழமுடிகிறது. இப்படியே மக்களுக்குக் க்ளோரபாரம் பயக்கும் நன்மைகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

யங்சிம்ப்ஸன் க்ளோரபாரம் கண்டுபிடிக்கா முன்பு, ஆப்ரேஷன் செய்து கொள்ளப் போபவன் தூக்குமேடையை ஏறப்போகும் குற்றவாளியை ஒத்தவனாக இருந்தானாம். தூக்குத் தண்டனை யடைந்தவன்போலவே ஒவ்வொரு நாளாக எண்ணுவானாம்; ஆப்ரேஷன் செய்யப் போகும் அந்த நாளும் வரும். ஒவ்வொரு மணியாக எண்ணுவானாம். டாக்டர் வரும் அந்த மணியும் வரும். ஒவ்வொரு நொடியாக எண்ணுவானாம். டாக்டர்கதவைத்தட்டும்சத்தம் கேட்கும், நொடியும் வந்துவிடுமாம். நோயாளியின் உடலெல்லாம் நடுங்குமாம்; உயிரெல்லாம் துடிக்குமாம். டாக்டர் வருவான். அவனுடைய கத்தி, கொரடா முதலான கருவிகள் வெளியே எடுத்து வைக்கப்படும். நோயாளியைக் கையொருவர், காலொருவராகப் பிடித்துக் கொள்வார்கள். அப்பா! நினைத்துப் பார்த்தால்கூட உடல் வியர்க்கிறது. அறுக்கவேண்டிய கையையோ, காலையோ, மற்ற கருவிகளையோ நோயாளி துடிதுடிக்க அறுப்பான் மருத்துவன். குருதி—குருதி—எங்கும் குருதி. படுக்கையெலாம் குருதி. மருத்துவனின்கையெலாம், உடையெலாம் குருதி. இத்தகைய ஆப்ரேஷன்களாலுண்டான அதிர்ச்சியால் இறந்தவர்களனேகர். மருத்துவரின் கசாப்பு வேலையால் மாண்டவர் அளவிலர். ஆம்! கசாப்புவேலைக்குச் சரி நிகராகத்தான் இருந்தது அந்தக் காலத்து இரணசிகிச்சை முறை.

க்ளோரபார்ம் வந்தது. மறைந்தது எல்லாம். மக்களின் பெருமிடி மாய்க்கப்பட்டது க்ளோரபாரத்தால், அதாவது யங்சிம்ப்ஸனால். இரணசிகிச்சை முறை மூளையை யெடுத்து வேறுமூளையை வைக்கும் அளவுக்கு முன்னேறிவிட்டது; வயிற்றைக் கிழித்துக் குடல்களைச் சீர்படுத்தி, மறுபடியும் இருந்த இடத்திலேயே வைக்கும் அளவுக்கு முன்னேறி விட்டது. கோளங்களை எடுத்து வேறு கோளங்களை வைத்து விருத்தனைக் குமரனாக்கும் விந்தை வரைக்கும் முன்னேறி விட்டது. எல்லாம் எதனால்? சிம்ப்ஸனின் க்ளோரபாரத்தால்.

நோயாளிகள், தங்கள் கால்கள் வெட்டப்படும் பொழுது கதறிய கதறல், அவன் கண்களில் நீரைக் கலங்கச் செய்தது. தாய்மார்கள் தங்கள் மகவுகளை ஈனும் போது பட்ட பாட்டைக் கண்டபோது அவனிதயம் வெடிக்கும் நிலையையடைந்தது. எனவே தாய்மார்களின் பிரசவவேதனையை மறக்கடிக்க மருந்தொன்று கண்டுபிடிக்கவேண்டுமென்று அவன் இளமையிலேயே உறுதி கொண்டான்.

ஏழை ரொட்டிக்காரன் மகனாய்த்தான் பிறந்தான். படித்தான். மருத்துவப் பட்டம்பெற்றான். நோயை மறக்கடிக்கும் மருந்துகளைக் கண்டுபிடிக்கும் வேலையிலீடுபட்டான். கண்ட கண்ட மருந்துகளை முகர்ந்து முகர்ந்து பார்ப்பான். ஒருமுறை மயக்கம் வந்து வீழ்வான். மறுமுறை தலைவலியால் துயருறுவான். பிறிதொரு முறை காய்ச்சலால் கவலைக்கிடமாவான். இத்தகைய நேரங்களில் அவன் சிறிது அஞ்சுவான். தனது முரட்டுத்தனமான செய்கைகளுக்காக. உடல் சரிப்பட்டதும் எப்பொழுதும்போல் மருந்துகள் முகர்ந்து பார்க்கும் வேலையிலீடுபடுவான்.

ஒருநாள் "சல்ப்யூரிக்ஈதர்" என்ற நோய் மறப்பு மருந்தை சேரீனும் கருவாயிலிருந்த தாயை முகரச் செய்தான். அவள் நோயுணராது மகனை ஈன்றெடுத்தாள். அதனால் அவனடைந்த இன்பத்திற்கு அளவேயில்லை. அவன் அப்பொழுதே தன் மூத்தோனுக்கு "மகாராணியும் என்னை மதிக்கிறார்கள் பெரி

தாக. ராணியின் மதிப்பு மகிழ்ச்சிக்குரியதுதான். ஆயினும் அது கூட எனக்கு அவ்வளவு இன்பந் தரவில்லை. சல்ப்யூரிக் ஈதர் என்னும் நோய் மறப்பு மருந்தை முகரச் செய்து தன் மகவைத் துன்பமில்லாமல் பெற்றெடுக்கச் செய்தேன் ஒரு தாயை. அதுதான் எனக்கு அளவிலாப் பேரின்பத்தைக் கொடுக்கின்றது'' என்றெழுதினான்.

ஒருமுறை ஒரு மருந்தை இரு எலிகள் முகருமாறு செய்தான். அவை சிறிது நேரத்தில் மயக்கமுற்றன. அரை மணி நேரத்திற்குப் பிறகு கால்களையும், காதுகளையும் அசைத்தன. நல்லதோர் மறதி மருந்தைக் கண்டுபிடித்து விட்டோம் என்றெண்ணினான். மறுநாள் காலை தன் துணைவனிடம் நடந்ததைக் கூறி, நாமும் முகர்ந்து பார்க்கலாமா?' என்று கேட்டான். நல்லகாலமாக அத் துணைவன், ''எலிகள் எப்படி இருக்கின்றன என்பதைப் பார்த்து விட்டு வந்து முகரலாம்'', என்றான். அவ்வாறே போய்ப் பார்த்தால் இரண்டு எலிகளும் இறந்து கிடந்தன. தக்கசமயத்தில் தக்கயோசனையை அத் துணைவன் கூறியிராவிட்டால், இறப்பை நுகர்ந்து இடுகாடல்லவா அடைந்திருப்பார் அவ்விருவரும். இத்தகைய ஆபத்துகள் எத்தனையோ!

ஒரு நாள் பிரெஞ்சு விஞ்ஞானியாகிய டியூமாஸ் ஒரு மருந்துப் புட்டியைச் சிம்ப்ஸனுக்கனுப்பி அதன் தன்மையை ஆராயுமாறு கேட்டிருந்தார். சிம்ப்ஸன் வீட்டில் அவனது தோழர்கள் மூவருக்கு ஒரு நாள் விருந்தளிக்கப்பட்டது. விருந்து முடிந்ததும் நான்குபேரும் ஒருவட்ட மேசையைச் சுற்றி உட்கார்ந்தனர். அப்பொழுது சிம்ப்ஸன் டியூமாஸினிட மிருந்து வந்த புட்டியைக் காட்டி அம்மருந்தை முகரலாமா என்று தன் தோழர்களைக் கேட்டான். அவர்களு மதற்கிசைந்தனர். நான்கு பேரும் நான்கு பாத்திரங்களில் ஊற்றிக் கொண்டு முகர்ந்தனர். முகர்ந்தனர், முகர்ந்தனர், மயக்கம் வருமட்டும் முகர்ந்தனர். சாய்ந்தனர் மேசை மீது மயக்கத்தால். வந்து பார்த்தான் வேலைக்காரன். திடுக்கிட்டான். ஓடினான். மிஸஸ் சிம்ப்ஸனிடம் கூறினான் நிகழ்ந்ததை. அவள் ஓடோடியும் வந்தாள். கண்டாள் தன் கணவன் மூர்ச்சையாகி வீழ்ந்திருப்பதை. நடுங்கினாள் காதன் போய்விடுவான் என்று. அஞ்சினாள்; அலறினாள், துடித்தாள் துணைவன் பெருந் தூக்கந்தூங்கி விடுவானோ என்று!

கால்மணி நேரத்தில் உடலசைத் தெழ ஆரம்பித்தனர் அவர்கள். அப்பொழுது தான் காரிகைக்கு வந்தது உயிர். நினைவிற்கு வந்ததும் சிம்ப்ஸன் நிகழ்ந்தது கேட்டு மகிழ்ந்தானாம். எதற்கு? தன் இல்லாள் இதயம் பதைக்க இறந்தன்ன நிலையை அம்மருந்துண்டாக்கியதற்காக! இத்தனை நாட்களாகத் தேடிய இன்பொருள் கிடைத்தது கண்டு அவனிதயம் இன்பத்தால் பூரித்தது. மக்களினம் வாழ ஒரு மருந்து கண்டு பிடித்து விட்டோம் என மகிழ்ந்தது அவனது உள்ளம்.

அவ்வரு மருந்து தான் குளோராபார்ம். அதை முடிவில் அடைந்தான் பல ஆபத்துக்களையுந்தாண்டி. அதனையடைவதற்காக எத்தனை யோதரம் கூற்றுவன் பிடியில் சிக்கிச் சிக்கி மீண்டிருக்கிறான். முடிவில் கண்டு பிடித்தான். அவனியின் அல்லலைத் துடைத்தான்.

உத்தமன் லெவிசியர் தன்னுயிரைக் கொடுத்தான், மக்களை மஞ்சள் காய்ச்சலின் கோரப்பிடியினின்றும் விடுவிக்க. கத்திபடும் போது கதறும் மக்களின் கலக்கத்தையொழிக்கக் காலனூரின் வாயிலை அணுகியணுகி மீண்டிருக்கிறான் பன்முறை யங்சிம்ஸன். இவர் போன்றோர் தாம் மக்களின் ஊழியர்; தொண்டர்கள்; மக்களை வாழ்விக்க வந்தோர்.

[5ம் பக்கத் தொடர்ச்சி]

சோறு நிறைய இருக்கிறதா சார்?'

ஓர் கருஞ்சட்டை மாணவன்:- 'எனக்கு ஒரு சந்தேகம் சார்'

வி உ:- 'என்னடா, உனக்குக் கூட சந்தேகம்......மண்டு'

க. மா:- ஆமாம் சார்; இரத்தமும், எலும்பும், சதையும் கொண்ட திருமால் உடலில் தண்ணீரில் வளரும் தன்மை வாய்ந்த தாமரை எவ்வாறு உற்பத்தியாக முடியும் சார்?

உபாத்தியாயர் பதில் கூறாமல் மழுப்பவே மாணவர்கள் புன்னகை புரிந்து அவரை ஏளனம் செய்யத் தொடங்கினர்.

'நாத்தீகத்தைப் பலர் முன் பள்ளியில் பரப்பிய மாணவன்' என, எள்ளி நகையாடப்பட்ட ஆசிரியரால் 'ரிமார்க்' எழுதப்பட்டு, தலைமை உபாத்தியாயரிடம் சமர்ப்பிக்கப் பட்டது. மேலும் 'நாத்தீகத்தைப் பரப்ப உதவிய் மாணவன்' என கருஞ்சட்டை மாணவன் மீதும் 'ரிமார்க்'

தலைமை ஆசிரியர் நடேச சாஸ்திரி 'அதிகப் பிரசங்கிகள்' இருவரையும் விசாரித்துக் கொண்டுள்ளார்.

பெறக்கூடிய வெகுமதி நீங்கள் அனைவரும் அறிந்தது தானே!

ஏ, பார்ப்பனீயமே! பல நாள் புரட்டு ஒரு நாள் வெளி வருவது உறுதி.

பாப்பாத்தி கண் வலையில் பட்டுத் தவியாதீர்!

★

இந்திய சர்க்கார் சட்ட மந்திரியும், தாழ்த்தப்பட்டோர் தலைவருமான தோழர் அம்பேத்கார் அவர்கள், ஏறத்தாழ இரண்டு மாதங்களுக்கு முன்னால்தான் பார்ப்பனத் தோழி லட்சுமியை மறுமணம் செய்து கொண்டார் என்று கேள்விப்பட்டோம்.

அந்த அம்மையார், ஏன் அம்பேத்காரை மணந்தார் என்கிற உண்மையும் இப்பொழுது தெரிய வருகிறது.

ஒரு வாரத்திற்கு முன்னால், அம்பேத்கார் அவர்களைக் கொல்வதற்கு, இந்தப் பாப்பாத்தி அம்மாள் பானத்தில் நஞ்சைக் கலந்து கொடுத்ததாகவும், பானத்தின் வாசனையைத் தற்செயலாக முகர்ந்த அம்பேத்கார் சந்தேகப்பட்டுப் பானத்தைப் பருகாமல் பரிசோதனைக்கு அனுப்பியதாகவும், பரிசோதித்த டாக்டர் நஞ்சு கலந்திருப்பதாய்க் கூறியதாகவும், அதன்மீது அந்த அம்மாள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் இப்பொழுது செய்தி வந்திருக்கிறது.

படுகொலையிலிருந்து தப்பிய அம்பேத்கார் அவர்கள், பாப்பாத்தி கண் வலையில் பட்டுத் தவியாதீர் என்று இனி உபதேசம் செய்வாரானால் யார்தான் ஆச்சரியப்படுவார்கள்?

★

அநுதாபம்.

15—5—48 திண்டுக்கல். இவ்வூர் சலவைத் தொழிலாளர் சங்கத்தலைவர் தோழர் எஸ். எஸ். சங்கய்யா அவர்கள் மகன் தோழர் எஸ். சுப்பய்யா அவர்கள் தனது 36-வது வயதில் இயற்கை எய்தினார். அன்னாருக்காக இவ்வூர்ச் சலவைத் தொழிலாளர் அனைவரும் தமது வேலைகளையும், கடைகளையும் நிறுத்திச் சங்கத்தின் வழியாகத் தங்கள் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

உடலுழைப்பு வேலையை ஏற்காவிட்டால், உயர்தர வேலைகள் மட்டும் ஏன்?

★

பேர்கள், 200 பெண்களும் 800 ஆண்களுமாக உத்திரவை மீறிக் கள்ளுக்கடைகளில் மறியல் செய்தார்கள், அவர்கள் பெயரைப் போலீசார் எழுதிக்கொண்டு போய் "இந்த ஆயிரம் பேரையும் அரஸ்ட்டு செய்தால், நாளை 2000 பேர்கள் வருவார்கள், என்ன செய்வது" என்று மேல்திகாரிக்குத் தந்தி அடித்தார்கள். "யாதொரு நடவடிக்கையும் எடுக்க வேண்டாம், உத்திரவைக் கான்சல் செய்து விடுங்கள்" என்று மேலிருந்து உத்திரவு வந்து, ஈரோட்டுக் கள்ளுக்கடைகள் 4-ம் உடனே மூடப்பட்டன. இந்தசங்கதிகள் பத்திரிகைகளில் வந்ததைக்காந்தியார் பார்த்தார். ஈரோட்டிற்கு என் மனைவிக்குப்பாராட்டுத்தந்தி ஒன்று கொடுத்தார். ஜனவரி சுமார் 17, 18 தேதியில் பம்பாயில் சங்கர் நாயர் தலைமையில் கூடின ஒரு எல்லாக்கட்சி மாநாட்டில் காந்தியாரையும் வைத்துப் பேசும்போது சங்கர் நாயரும், பண்டித மாளவியாவும் "மறியலை உடனே நிறுத்துங்கள், மேலால் ராஜீ பேசலாம்" என்று காந்தியாரைக் கேட்டார்கள். அதற்குக் காந்தியார் "மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை. ஈரோட்டில் இரண்டு பெண்களிடம் (நாகம்மாள்—கண்ணம்மாள் இடம்) இருக்கிறது. அவர்களைக் கேட்டுத்தான் பதில் சொல்லவேண்டும்" என்று சொன்னார். 1922ம் வருடம் ஜனவரி மாதம் 19தேதி 'இந்து' பத்திரிகையிலும் இருக்கிறது.

டாக்டர் டி. எஸ். எஸ். இராஜனுக்கும், சி. ராஜகோபாலாச்சாரியாருக்கும் இது தெரியும். அவர்தான் எனக்குக் காட்டினார். மற்றும் மூன்று நான்கு தடவை 1923, 24ல் நான் காங்கரசு சார்பாய் சிறைபட்டு இருக்கிறேன். அப்போது ஏ. பி. சி. கிளாஸ் கிடையாது. எல்லாம் சி. கிளாஸ்தான். இந்த நடத்தைகள் காங்கரசுக்குப் பலம் கொடுத்தது என்பதோடு, மற்றவர்களுக்கும் வழிகாட்டிற்று. அப்படிப் பாடுபட்டுத் திராவிட- ஆட்சியையும் ஒழித்து, சுயராஜ்ஜியத்துக்கு என்று கருதி ஆரியர் கைக்கு ஆட்சி வரச்செய்ததில் முக்கிய பங்கு கொண்டேன். அப்படிப்பட்ட ஆரிய ஆட்சி இன்று திராவிடர்களுக்கு இம்மாதிரி தீங்குசெய்யுமானால் அதை கண்டிக்க, திருத்த, முடியாவிட்டால் ஒழிக்க எனக்கு உரிமை உண்டு. அதனால் தான் யாரையும்விட நான் அதிகப் பங்கு எடுத்துக்கொண்டு உழைக்க வேண்டியவனானேன்.

நம் வேலை முறை.

பல விஷயங்களைப் பற்றி பேசலானேன். இனி நம் வேலை முறைபற்றிச் சிறிது பேச ஆசைப்படுகிறேன். தோழர்களே! எனக்கு உண்மையில் சட்டங்களை மீறவோ, ஜெயிலுக்குப் போகவோ சிறிதும் ஆசையில்லை. உங்களையும் மீறச் செய்ய சிறைக்கு அனுப்ப ஆசையில்லை. ஆனவரை தடுக்கவே முயற்சிக்கின்றேன். இன்றியமையாத சந்தர்ப்பத்தைச் சர்க்கார் அளிப்பார்களானால் ஓடி ஒளிய மாட்டேன், ஒளியச்சொல்லவு மாட்டேன். அதை நல் வாய்ப்பாகவே கொள்ளுவேன். அப்படிச் சந்தர்ப்பம் வரவேண்டாம் என்றே ஆசைப்படுகிறேன்.

சர்க்கார் நடந்து கொள்ளும் போக்கில் நம்நாட்டில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவதும், அதை அரசியல் தொழிலாக்குவதும், உத்தியோகத் தகுதிக்கு இந்தப் பாஷைப் பாண்டித்யதையும் சேர்ப்பதும் திராவிட மக்களை வம்புச் சண்டைக்கு இழுக்கும் அகம்பாவ, ஆணவகாரியமாகும். எந்தக் காரணத்தைக் கொண்டாவது காங்கரஸ் சர்க்கார் இந்தத் திட்டத்தைக் கைவிட்டாகவேண்டும்.

வகுப்பு வாரிப்பிரதி நிதித்துவத்தை எந்தக்கணக்குப்படியானாலும் வகுப்புப் பிரித்துப் பார்ப்பனர்களுக்கு அவர்கள் சமுதாய எண்ணிக்கையாக 100-க்கு 3 வீதத்திற்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கீழ்த்தர உத்தியோகமாகிய பியூன் முதலிய உத்தியோகங்களிலும் அந்த வகுப்பார் அவர்கள் விகிதாச்சாரம் ஒப்புக்கொண்டு வேலை செய்ய முன்வர வேண்டும்-அப்படிக்கு இல்லையானால் மேல்தர உத்தியோகங்கள் அவர்களுக்கு வழங்கப்படக்கூடாது. ஏனெனில் நாட்டுக்கு ஆக,பொது சேவைக்கு ஆக, "கீழ்தரம்" என்றுசொல்லப்படும் உடலுழைப்பு வேலையை, ஏவல் ஏற்கும் வேலையை ஏற்க ஒரு ஜாதி ஒப்புக்கொள்ள வில்லையானால், அவர்களுக்கு அந்த ஜாதிக்கு மேல்தர வேலை எதற்காகக் கொடுக்கவேண்டும்? பாட்டுக்கு ஒரு ஜாதி-பதவிக்கு ஒரு ஜாதியா?

மற்ற வகுப்பார் பார்ப்பனர் பார்க்கும் உத்தியோக எண்ணிக்கை அளவுக்குச் சரிசமமாய் வரும்வரை பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் வழங்குவது நிறுத்தப்பட்டே ஆகவேண்டும். இப்படிச் செய்யவில்லையானால் இந்த நாட்டில் என்றுமே சமுதாய சமத்துவம் ஏற்படாது. இது சர்க்கார் காரியாலயங்கள் மாத்திரமல்லாமல், சர்க்கார் அனுமதி, ஆதரவு உள்ளதும் சலுகைக்கும் மேற்பார்வைக்கும் கட்டுப்பட்டதுமான எல்லா ஸ்தாபனங்களிலும் இந்த விகிதம் இருக்கும் படியான நிபந்தனைகளைக் கட்டாயப்படுத்த வேண்டும்.

பொது மக்கள் வரிப்பணத்தில் நடக்கும் சர்க்கார் பள்ளிக்கூடங்களில், திண்ணைப் பள்ளிக்கூட முதல் சர்வ கலாசாலை வரையில் வரி கொடுக்கும் மக்கள் பாட்டாளி மக்கள் சமுதாய (வகுப்பு) எண்ணிக்கை வீதமே பிள்ளைகள் சேர்க்கப்படவேண்டும். மீதிப் பிள்ளைகள் சொந்தத்தில் படித்துக் கொள்ளட்டும்.

சர்க்கார் என்பது ஒரு ஜாதிக்கு தர்ம சத்திரமா?

வக்கீல்கள் எண்ணிக்கையை நிர்ணயம் (குறைவு) செய்து, வகுப்பு மக்கள் எண்ணிக்கைப்படியே சன்னது கொடுக்கவேண்டும். நாட்டில் பிழைக்க எத்தனையோ தொழில் இருக்க, பாட்டாளி மக்கள் வரிப்பணத்தைக் கொள்ளையடிப்பதை ஏன் தொழிலாய் ஒரு ஜாதியாரே கொள்ளவேண்டும்?

உருப்போட்டு ஒப்புவிப்பது என்பதே எந்தப்படிப்புக்கும் பரீட்சை முறையாக இருக்கக்கூடாது. அப்படியானால் அர்ச்சகனும், புரோகிதனுமேதான் ஒப்புவிக்க முடியும்.

பகுத்தறிவும், உடல் சக்தியும், உலக ஞானத்திறமையும், நல்ல பரம்பரையும், இயற்கை நற்குணமும் முக்கிய பரீட்சையாக இருக்கவேண்டும். அந்த பரீட்சையும், உத்தியோகம் கொடுக்கப்படும் காலத்தில்தான் பரீட்சிக்கப் படவேண்டுமே ஒழிய, பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு வருஷமும் பரீட்சை என்பது தேவையில்லாததாகும்.

எந்தஉத்தியோகத்துக்கும் அதற்குத் தேவையான அளவுதான் தகுதி வைக்கவேண்டும்.

பள்ளிப்படிப்பில், ஒரு மாணவன் வகுப்பில், இத்தனைநாள் கிரமப்படி ஆஜராகி விஷயங்களைச் சரிவரக் கவனித்துக்கொண்டிருந்தகாலம் (Term-Course) தீர்ந்தால் போதும் என்று மேல் வகுப்புக்கு அனுப்பப்படவேண்டும். பரீக்ஷை மூலம் மக்களை பள்ளியில் மேல்வகுப்புக்குச்செல்லவிடாமல் கழிக்கக்கூடாது. நிறுத்தக்கூடாது.

பொதுப்படிப்புக்கு ஆக ஒரு பையன் 15 வருடம் அதாவது வருடத்திற்கு ஒரு வகுப்புத் தேறினாலும் பி. ஏ. முடிக்க 15 வருடம் படிக்க வேண்டுமென்றால் இது மிகவும் அநீதியான காரியமாகும். ஏனெனில் 6ம் வயதில் பையன் படிக்கத் தொடங்கினால் பி. ஏ. க்கு 21 வருடம் ஆகி விடுகிறது. அப்புறம் தொழில் படிப்புப் படிக்க 3, 4, 5, வருடங்கள் தேவைப்படுகிறது. பிறகு அவன் அதில் அனுபவம் பெற்றவனாவதற்கு 4, 5 வருடமாகும். இவற்றால் பையனின் நல்ல மூர்த்தண்

கொஞ்சநஞ்ச மீதியையும் கொன்றொழிப்பதுதானே சுயாட்சி.

★

ணியமான ஆயுட்காலம் வீணாகப் போகிறதல்லாமல் பெற்றோர்களுக்கும் எவ்வளவு பணம், எவ்வளவு நாளைச் செலவிட வேண்டி இருக்கிறது. எத்தனை காலத்தை மாணவ வாழ்க்கையில் கழிப்பது? காலம் பணம் செலவழித்தவனுக்கெல்லாம் உத்தியோகம் கிடைக்கின்றதா?

18வது வயதில் ஒரு பையனைக் கலியாணம் செய்து கொள்ள அனுமதிக்கிறோம், சட்டமும் அனுமதிக்கிறது. அவன் படிப்பு முடிந்து வேலைக்குத் தயாராக மாத்திரம் 22 வயது 25 வயது ஆகவேண்டுமா? தொட்டில் ஒரு கையிலும் புஸ்தகம் ஒரு கையிலும் பிடித்துக்கொண்டும் மனைவியை ஒரு கண்ணில் பார்த்துக் கொண்டுமா படிப்பது? இளங்குழந்தையையும், மனைவியையும் கொஞ்ச நேரமெங்கே? இப்படிப்பட்ட இந்தப்படிப்புச்செல்வவான்களுக்கும், செல்வமில்லாவிட்டாலும்படிக்க வசதியும், வாய்ப்பும் உள்ள பிறவியினால் பிறவிச் செல்வர்களான பார்ப்பனர்களுக்கும்தான், அதாவது மொத்த ஜனத்தொகையில் 100க்கு 5, 6 பேர்களுக்குத்தான் ஏக போக உரிமை உள்ளதாக இருக்கிறதே தவிர ஏழை மக்களுக்கும், புத்தி, சக்தி, திறமை, உலக ஞானம், நற்குணம், நற்செய்கை நல்ல குண பரம்பரை உள்ள மக்களுக்கும் படிக்க வாய்ப்பில்லாமலே போய் விடுகிறது. ஆகவே இது வருணாச்சிரம தர்ம முறைக்கேற்றபடி ஏற்படுத்தப்பட்ட படிப்பு முறையாகவே இருக்கிறது. வர்ணாச்சிரமம் கூடாது என்கின்ற போது வர்ணாச்சிரமப் படிப்பு முறையும் ஒழிந்தாக வேண்டாமா?

ஆதலால் ஒரு அளவுக்கல்வி வரை பொதுக்கல்வியாக எல்லாச் சமுதாய மக்களும், படிக்கும் வயது வந்த 100க்கு 100 பேரும் படிக்கும்படியாகச் செய்து விட்டு, உத்தியோகத்திற்கும், தொழிலுக்கும் அவசியமான அளவு கல்வியை மாத்திரம் ஜாதி வகுப்புப் பிரிவு மக்கள் எண்ணிக்கைகள்படி கொடுத்து வரலாம். சர்க்கார் நடப்புக்கு அல்லாமல், அதற்கு வேண்டிய மக்கள் எண்ணிக்கைக்கு அல்லாமல் மேல்படிப்பு என்பதற்கு மக்கள் வரிப்பணத்தில் ஒரு காசும் செலவு செய்யாமல் இருக்க வேண்டும்.

கல்விக்குச் செலவு செய்யப்படும் காசு அவ்வளவும், மக்களை எழுதப் படிக்கக் கணக்குப்போடத் தெரியுமளவுக்கு மாத்திரம் செலவு செய்யவேண்டும்.

ஆங்கிலம் தேவை இல்லை என்றான பிறகு, தமிழ் நாட்டுக்குச் சமஸ்கிருதம் தேவை இல்லை, இந்தி தேவையில்லை என்று ஏன் செய்யக்கூடாது? அப்படி ஏற்பாடு செய்துவிட்டால் படிப்பின் தொல்லை பெரும் அளவுக்கு நீங்கி விடும். அதற்கு ஆகும் காலமும், செலவும் பெரு அளவுக்கு நீங்கி விடும். கட்டடம், காலேஜ், "ஆப்பரட்டஸ், ஆஸ்டடல், என்கின்ற பணம் பிடுங்கிப் பேயாட்டமும் வெகு தூரம் குறைந்து விடும். உருப்போடுவதே பரீட்சை யோக்கியதையாவதும், 15 வருடம் படிப்புக்காசப் பாழாவதும் தானாகக் குறைந்து விடும்.

100க்கு 75 உபாத்தியாயர்களைப் பெண் உபாத்தியாயர்களாகவே இருக்கச் செய்யலாம். அல்லது கணவன் மனைவி இருவரையும் ஜோடி உபாத்தியாயர்களாக ஆக்கிச் செலவைச் சிக்கனமாக்கலாம். ஆண் உபாத்தியாயர் மனைவியைக் காப்பாற்ற வேண்டும், பெண் உபாத்தியாயர் புருஷனைக் காப்பாற்ற வேண்டும். அவர்கள் வாழ்க்கைக்கும் மாதம் 100, 200, 300, 500, 1000, வீதம் சம்பளம் தேவைப்படும். ஜோடி உபாத்தியாயர் ஆனால் செலவு சுருக்கலாம்.

ஓலைச்சாலைக் கொட்டகைகள் கல்விகற்றுக்கொள்ளப் பாமர மக்களுக்குப் போதுமானதாகும்.

அந்தந்த நாட்டில் அந்தந்த மொழியே போதனா மொழியாக இருக்க வேண்டும். அந்தந்த நாட்டு மொழியிலேயே சர்க்கார் நடக்க வேண்டும்.

அந்தந்த நாட்டுக்கலையே பொது அறிவுக்கு உணவாக இருக்க வேண்டும்.

ஒரு மாகாணம் தான் ஒரு நாடாய் இருக்கவேண்டுமே ஒழிய ஒரு கண்டம் 2000 மைல் நீளம் 1500, 2000 மைல் அகலம் கொண்ட ஒரு பெரும் தேசம் ஒரு நாடு ஆகக்கூடாது. இதுதான் பரிசுத்தமான தேசியம் (நேஷனலிசம்) என்பதாகும். இம்முறை கைக்கொள்ளப்பட்டால் 5 வருடத்தில் படிப்பின்மை இந்நாட்டில் ஒழிந்து விடும்.

கலை.

இனி கலை விஷயங்களைக் கவனிப்போம். கலை என்பதெல்லாம் மக்கள் வாழ்க்கைக்கும், அறிவுப் பெருக்கத்துக்கும் பயன் பெறக்கூடியதாய் இருக்க வேண்டுமே தவிர, வெகு சிலருக்கு மாத்திரம் புரியும்படியான, ஆனந்தப்படும்படியான வெறும் அற்புதத்தையும், அதிசயத்தையும், பண்டிதத் தன்மையையும் மாத்திரமே காட்டுவதற்கு ஆக என்று இருக்கக்கூடாது, எப்படிப்பட்ட கலையும் ஒழுக்கக் குறைவுக்கும் மூட நம்பிக்கைக்கும் சிறிதும் பயன்படக்கூடாததாய் இருக்கவேண்டும். வடமொழியை, வடநாட்டுப் பழக்கவழக்கத்தை மூலமாகக் கொண்டது எதுவும் நம் தென்னாட்டுக் கலையில் சம்பந்தப்பட்டதாகஇருக்கக்கூடாது. ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டுப் பழக்க வழக்க ஆச்சார அனுஷ்டானங்களுக்கு ஏற்றதாகவும், அந்தந்த நாட்டு சீதோஷ்ண நிலைக்கும் மக்கள் தகுதிக்கும் ஏற்றதாகவும், கலையும், மொழியும் இருக்க ஒவ்வொரு சுதந்தர நாட்டுக்கும் உரிமையுண்டு. அதை மாற்றுவது, மாற்றியமைப்பது என்பது ஒன்றை மற்றொன்றிற்கு மாற்றி அடிமைப்படுத்துவதேயாகும். இந்த முறை கொண்ட ஆட்சி ஒருநாளும் சுயாட்சி ஆகாது.

ஆதலால் திராவிட நாடல்லாதமற்ற (வட) நாட்டுச் சரித்திரம், மதம், கலை முதலியவைகளை நம் நாட்டில் மக்களுக்குள் புகுந்து ஆதிக்கம் செலுத்தக் கண்டிப்பாய்ச் சிறிதும் இடம் கொடுக்கக்கூடாது என்பேன்.

இன்றையச் சுயாட்சி என்னும் வடநாட்டு ஆரிய ஆட்சியின் முதல் வேலையெல்லாம் கொஞ்ச நஞ்சம் மீதியிருக்கும் திராவிடக்கலை, திராவிட இன உணர்ச்சி, திராவிடச் சின்னம், திராவிட மொழிச் செல்வாக்கு, திராவிட தர்மம் ஆகியவைகளையெல்லாம் அடியோடு ஒழித்துத் திராவிட மக்களை மனுதர்ம, ஆரியர் உயர்வாழ்வுக்கு அடிமைப் படுத்தி ஆட்சி புரிய வசதி செய்து கொள்வதேயாகும்.

சரித்திரகால வேத புராண காலந் தொட்டு ஆரியருக்கும் திராவிடருக்கும் இருந்து வந்த போராட்டமும், தொல்லையும் ஒரு அளவுக்காவது ஒழியும்படியான சந்தர்ப்பம் இயற்கையாய் வந்த இக்காலத்தில், மறுபடியும் எப்படியோ அதே புராணகால ஆரிய ஆதிக்கமும், ஆட்சிக் கொடுமையும் நம் நாட்டில் ஏற்படவும், நிலை நிறுத்தவுமே விளைந்த வினை என்று தான் இந்தச் சுயராஜ்ஜியத்தைச் சொல்ல வேண்டி இருக்கிறது.

நாம் ஆரியக்கொடுமை, ஆட்சி ஆகியவற்றிலிருந்து மீளவேண்டுமானால், நம் மக்களை, நாட்டை மீளவைக்க வேண்டுமானால் ஆரியக்கலை, மொழி, மதம் முதலான ஆரியம், இனி அடியோடு நம் நாட்டுக்குள் புகாமல் இருக்கும்படியும், இருப்பவை வெளியாக்கப்படும்படியும் பார்த்துக்கொள்ளவேண்டும்.

ஆரிய மதத்துக்கும், கலைக்கும், மொழிக்கும் அடிமைப்பட்டதாலேயே திராவிடம் திராவிட மக்கள் இவ்விழி நிலைக்கு வரநேர்ந்தது என்பதை உணரவேண்டுகிறேன்.

ஆரியக்கலை, புராணம் முதலிய சினிமா, நாடகம், பாட்டு, கதை காலட்சேபம் ஆகியவைகளைத் திராவிட

நாம் சூத்திரர்களாக வாழோம். நமது லட்சியம், நமது மூச்சு இதுவே !

★

மக்கள் அடியோடு வெறுக்க வேண்டும். அதிலும் திராவிடக் கழகத்தார் கண்டிப்பாய் ஆதரிக்கக்கூடாது. அவைகளுக்கு எதிர்ப்புப் பிரச்சாரம் செய்ய வேண்டும். அவைகளின் ஆட்சி வண்டவாளம் விளங்கும்படியாகப் பல கருத்துக்களைச் சித்தரித்து அவைகளைக் கலையாக்கி நடிக்க வேண்டும், பாடவேண்டும், கதை காலட்சேபங்கள் சம்பாஷணைகள் ஆக ஆக்கவேண்டும். திராவிடப் புலவர்கள், கலைவாணர்கள், இசைவாணர்கள், நடிகர்கள், பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் மனதில் இந்த எண்ணம் தங்கள் மான உணர்ச்சியோடு கலந்ததாகக் கொண்டிருக்கவேண்டும்.

மற்ற பல விஷயங்களைப்பற்றிச் சென்ற மாநாடுகளில் நான் தெரிவித்துக்கொண்ட கருத்துக்களில்யாதொரு பெரிய முக்கிய மாற்றமும் வேண்டிய அவசியமும் நேரிட்டுவிடவில்லை.

நமது முன்னணி வேலை.

பிரச்சாரம்! பிரச்சாரம்! பிரச்சாரமேயாகும். அடிக்க அடிக்க அம்மியும் நகரும். நல்ல முறையில் நாடு முற்றும் கிராமம் பட்டி தொட்டிகளிலும் நம் கழகப் பிரச்சாரம் நடக்கவேண்டும். இதற்கு என்னுடையவும், மற்றும் நம் கழக அறிஞர்கள், தோழர்கள், பலருடையவும் சொற்பொழிவுகளிலுள்ள கருத்துக்கள் போதுமானதாகலாம். கடின பதங்களும், அநாகரிகச் சொற்களும், தப்புக்கணக்கும், பொய்க் கற்பனைகளும், மக்களுக்குக் கோபத்தையோ, ஆத்திரத்தையோ உண்டாக்கும் சொற்களையும் கண்டிப்பாகப்பிரச்சாரத்தில் பயன் படுத்தக் கூடாது:—

எதிரிகள் நமக்கு எவ்வளவு ஆத்திரமூட்டினாலும், தொல்லை கொடுத்தாலும், பலாத்காரத்தைப் பயன்படுத்தினாலும் நாம் நிதானமிழந்துவிடக் கூடாது. இன்றைய ஆட்சியோ, மனுநீதி ஆட்சி. அவர்களிடம் உள்ள மக்கள் மனுதர்மத்துக்கு அடிமைகள், விபீஷ்ண அனுமார் உணர்ச்சி பெற்ற நம் சகோதரர்கள். அவர்களது ஆத்திரத்துக்கு ஆத்திரமும், பலாத்காரத்துக்கு பலாத்காரமும், கையாளப்பட்டால் திராவிடருக்குத்தான் கேடு. பணிவில், பொறுமையில், அடிபடுவதில் நம் சகோதரர்களைத் திருத்தலாம். நம்மீது அவர்கள் பரிதாபம் கொள்ளும்படி நாம் நடந்து கொள்ள வேண்டும். பிரசாரகர் நம் செலவை ஆடம்பரத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். இது திராவிடர்க்கு உரிய இயற்கைக் குணமாகும். நம் சொந்த நடத்தையில், நம் குழந்தை குட்டி மனைவி வாழ்க்கையில் கூடுமான அளவு ஆரியத்தை ஒதுக்கித், திராவிடத்தை புகுத்த வேண்டும். இந்தத் துறையில் திராவிடக்கழகத்தவர், சிறப்பாக பிரச்சாரகர்கள் மற்ற திராவிட மக்களுக்கு வழிகாட்ட வேண்டும்.

நாம் மக்களில் பிறவியில் உயர்வு தாழ்வுகளைத்தான் வெறுக்கிறோமே தவிர யாரையும் சமத்துவமாகக் கொள்ளுவதில் தயங்குவதில்லை. ஆகையால் சமத்துவமான காரியங்களுக்கு யாரையும் வெறுக்கவோ, பகிஷ்கரிக்கவோ கூடாது.

பார்ப்பனர்களை மேல் ஜாதி மேலானவர்கள் என்ற கருத்துக் கொடுக்கும் படியானதும், நாமே நம்மைக் கீழ்மைப் படுத்திக் கொள்வதுமான கருத்துக் கொண்டதான 'சாமி' என்றும், 'பிராமணர்' என்றும் கண்டிப்பாக நாம் அழைக்கக் கூடாது.

அந்தக் கருத்தோடு நம் வீட்டுச் சமுதாய நன்மை, தீமைகளில் நம்மைவிட உயர்ந்த ஜாதியார் என்பவர்களைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது.

எந்த எந்தக் கோவில்களில் பார்ப்பனர் அர்ச்சகர்களாய் இருந்து கொண்டும், பார்ப்பனர்கள்தான் பூசை செய்ய வேண்டும் என்கிற நிபந்தனை இருந்து கொண்டும் இருக்கின்றனவோ, அக் கோவில்களுக்குத் திராவிட மக்கள் செல்லக் கூடாது. சென்றாலும் அப் பார்ப்பனர்கள் மூலம் பூசை ஆராதனை செய்து கொள்ளக் கூடாது.

முதலாவது எப்படிப்பட்ட தனி உருவங்களையும், விக்கிரகங்களையும் கடவுளாகக் கொள்ளக் கூடாது. விக்கிரகங்கள் கடவுள்களானதினால்தான் பார்ப்பனர் உயர்ஜாதி ஆகவும், கடவுள்கள் பேரால் மக்களைச் சுரண்டி வாழவும் வகை ஏற்பட்டுவிட்டது.

மேல்லோகம், கீழ்லோகம், மோட்சம், நரகம், பிதிர்லோகம், தேவலோகம் என்பதான புரட்டுகளுக்கு இடம் கொடுத்து அந்தக் கருத்துக்களுக்கு அடிமையாகக்கூடாது.

இவைகளாலும் கூடத்தான் பார்ப்பனர் மேல்ஜாதியாகி மக்களைச் சுரண்டிப் பாடுபடாமல் வாழ வகைசெய்து கொள்ள அவர்களுக்கு முடிந்தது.

கடவுள் வேண்டுதலை என்னும் பேரால் காசுபணம் கடவுளுக்கு உண்டிக்கு கொடுப்பது என்பது வெறும் முட்டாள்தனமாகும். வேண்டுதலைக்கு ஆக கடவுளுக்கு முடி (மயிர்) கொடுப்பது என்பது வடிகட்டின முட்டாள் தனமேயாகும். இவற்றால் நமக்கு முட்டாள்தனமும், செலவும்தான் மிச்சம். பார்ப்பானுக்கு கொல்லைச்செடிக் குலையிலிருந்து காய் பழம் உதிர்வதுபோல், பணமழை பெய்வதுபோல் லாபமாகும்.

நாம் 1948-ம் ஆண்டில், 1 மணிக்கு 700 மைல் பறக்கும் ஆகாய விமானம், ரேடியோ, கம்பியில்லாத் தந்தி, தந்தியில் போட்டோ, டாக்கீஸ், சினிமா முதலிய அற்புத அதிசய காலத்தில் இருக்கிறோம் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு இந்த முட்டாள் தனங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். பகுத்தறிவைக் கொண்டு யோசிப்பதின் மூலம், நாம் நாஸ்திகர்களாகவோ, பாபிகளாகவோ ஆகிவிடமாட்டோம்.

கழகக் கட்டுப்பாடு.

இனி கழக கட்டுப்பாடுபற்றி சில சொல்ல ஆசைப்படுகிறேன். கழக அங்கத்தினர்களுக்குள் கட்டுப்பாடு இருக்க வேண்டும். கழகத்தில் இருப்பவர்கள் தலைமைக்கு, கழக கட்டுதிட்டங்களுக்கு மரியாதை கொடுத்து, பின்பற்றுகிறவர்களாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் அது என்றைக்காவது பலனளித்தே தீரும். நம் சொந்த சவுகரியத்தை உத்தேசித்து தலைவருக்கும், கட்டுத் திட்டங்களுக்கும் மதிப்புக் கொடுக்காமல், தத்தம் செல்வாக்கைக் கொண்டே கழகக் காரியத்தைச் சாதிக்க முடியாது என்பதோடு எப்போதாவது அது ஏமாற்றத்தைக் கொடுத்துத்தான் தீரும், அன்றியும் அது எதிர்ப் போக்கில் நீந்த வேண்டிய அளவில் சிரமமும், தொல்லையும், உள்ள காரியமாகவாவது ஆகிவிடும். நம் கழகத்தில் யாருக்கு என்ன பெருமை இருந்தாலும் அடையும் சுயநலப் பயன ஒன்றுமில்லை. பொறுப்புள்ளவர்களுக்குத்தான் பெருமை இருக்கும். பெருமைக்கு ஏற்ற பொறுப்பும் பாடும் இருக்கும். ஆதலால் பொறாமைக்கு நம் இயக்கத்தில் இடமில்லை, அவசியமில்லை. தோழர்களே! என் தலைமை உரை நீண்டு விட்டது. அதிகச் சங்கதி சொல்ல வேண்டியது இருந்தும் திடீரென்று நிறுத்துகிறேன். முடிக்கிறேன். முடிக்குமுன்பு வழக்கம்போல் கூறி முடிக்கிறேன்.

கழக லட்சியம்:- நம்இழிவு நீக்கம், நம் முன்னேற்றத் தடை நீக்கம், ஆரியத்தில் மூட நம்பிக்கையில் இருந்து விடுபடுதல், பகுத்தறிவாளர்களாக, மானமுள்ள சமுதாயமாக ஆவது. இப்படிப்பட்ட நம் வேலை நெருப்போடு பழகுவதுபோல் பாமரமக்களிடம் பழகுவதாகும். அவர்கள் நம்பிக்கையைப் பெறவேண்டும். அவர்களைத் திருத்தியே ஆகவேண்டும். இதற்கு நல்ல பிரச்சாரம் வேண்டும், ஒத்துழைப்பு வேண்டும், ஒன்றுபடவேண்டும். நிலைகுலைந்து சின்னப்பட்டுக் கிடக்கும் மக்களை ஒன்றுசேர்த்து யாவர் பலத்தையும் ஒன்றாய்த் திரட்டி ஒருமூச்சுப்

பார்த்தாக வேண்டியவர்களாக இருக்கிறோம். இனி நாம் சூத்திரர்களாக வாழமாட்டோம் என்பதே நமது லட்சிய சொல் நமது மூச்சு.

வெற்றி கண்ணுக்குத் தெரிகிறது. அது கானல் நீரல்ல. கருத்தும் கவலையும் இருந்தால் கண்டிப்பாக அடைந்தே தீருவோம் என்கிற உறுதி எனக்கு உண்டு.

ஐந்தாம் முறையும் இம் மாநாட்டுக்குத் தலைவனாக தெரிந்தெடுக்கப் பட்டதற்கு எனது நன்றியறிதலை வெட்கத்தோடு தெரியப்படுத்திக் கொண்டு அமருகிறேன். மகாநாடு வெற்றிகரமாக நடந்தேற உங்கள் அன்பான ஆதரவைக்கோரி அமருகிறேன்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

னாகவோ இருந்தால் பரவாயில்லை. அதற்கு மேற்பட்டவனை நாம், மணமுடித்துக் கொள்வதில்லை என்ற சட்டத்தை நாமே ஏன் நிர்ணயித்துக் கொள்ளக் கூடாது? அறிவு இல்லாமல் தோழியர்கள் பணத்தை மணமுடித்துக் (பணத்திற்காகத்தானே கிழவனை மணந்துகொள்கிறார்கள்) கொண்டு, 20, 22 வயதிற்குள்ளே விதவைத் தன்மை அடைந்த பெருவாரியான இளம் விதவைகளை, நமது நாட்டில் தவிர வேறெந்த நாட்டில் காணமுடியும்? இதையெல்லாம் நினைத்தால் சுதந்தர உணர்ச்சியுள்ள பெண்களின் நெஞ்சம் வேகவில்லையா? இதையெல்லாம் நாம் எத்தனை காலம் சகித்துக் கொண்டிருப்பது? கன்னியர் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் பிசகிற்கு எதிர்காலம் நல்ல (?) பலனைக் கொடுக்கும் என்று நாம் வாளாயிருந்தால், உலகப் பெண் வர்க்கத்தினிடையே நமது இனப் பெண்கள் தலைகுனிய வேண்டிவருமே! அது நமக்கு எவ்வளவு அவமானம்? அதற்குள்ளேயே, நாம் திருந்தக் கூடாதா? அதாவது, நமது பக்கம் உணர்ச்சியுள்ள பல தோழியர்களை ஒரு செட்டாகத் தயாரித்துக் கொண்டு, கிழவர்களை மணந்துகொண்ட தோழியர்களைக் கண்டவுடன் நாம் எல்லோரும் பணத்திற்கு ஆசைப்பட்டு கிழவனை மணந்தவள் இவள்தான்! (அவர்களைச் சுட்டிக் காட்டி) புரட்சி ஓங்குக! கிழமணம் ஒழிக! பண ஆசை ஒழிக! என்று கேலி செய்ய வேண்டும். அவள் செய்த தவறை உணர்ந்து கண்ணீர் விட்டுக் கதறும் வரையில் நாம் புரட்சிக் கோஷங்களைச் சொல்லிக் கேலி செய்யவேண்டும். கிழவனை மணந்தாலும், அந்தத்தோழியர், நாம் அழகான கருப்புநிறப் பிளசரில் செல்லும் போது எவ்வளவு களிப்பாக இருக்கிறது என்று நினைத்தாலும், நமது புரட்சிக் கோஷங்கள் அவள் உள்ளத்திலே ஒரு கிளர்ச்சியை உண்டாக்கித்தான் தீரும். பிறகு கேட்பானேன்? என்னதான் பண ஆசை பிடித்திருந்தாலும் நமது கேலிக்கு அஞ்சி, கன்னித் தோழியர்கள் விழிப்படைந்து விடுவார்கள். மற்றும் பெற்றோர்களுக்கு அஞ்சி, புரோகித முறைப்படிதான் நமது திருமணத்தை முடித்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்திருக்கும் தோழியர்களே! பயப்படாதீர்கள்! உங்கள் பெற்றோரை நோக்கி நியாயமான கேள்வியைக் கேளுங்கள்! திருமணத்திலே, பட்டப் பகலிலே விளக்கு ஏன்? அம்மிமிதித்து அருந்ததியைப்பார்ப்பதேன்? சாப்பிடும் நெய்யை நெருப்பில் ஊற்றிப் பாழாக்குவதேன்? ஓமம் வளர்த்துக் கண்ணைக் கசக்குவதேன்? இதெல்லாம் பகுத்தறிவைப் பார்ப்பானிடம் அடகு வைத்துப் பஸ்கி போடும் பரம முட்டாள் செய்யும் வேலை. ஆகவே எங்கள் திருமணத்தைப் பகுத்தறிவு முறைப்படிதான் நடத்தவேண்டும். இல்லாவிடில் எங்களுக்குத் திருமணமே வேண்டியதில்லை என்று சொல்லிப் புரட்சி செய்யுங்கள். பெற்றோர்கள் பணிந்து விடுவார்கள். இப்படி நாம் சொன்னால் அவர்கள் மனம் மாறி விடுவார்கள். ஆகவே கன்னித் தோழியர்கள் ஒவ்வொருவரும், பழைய சம்பிரதாயத்திருமணங்களில் மண்ணைப் போட்டு விட்டு, புரட்சித் திருமணங்களாக-புரோகிதத்தை நீக்கி நடத்திக் கொள்ள முற்படவேண்டும்.

புரோகிதத் திருமணம் ஒழிக!
புரட்சித் திருமணம் ஓங்குக!

நாதன் கம்பெனி லிமிடெட்.

புத்தக விலைப் பட்டியல்.

குடிஅரசு பதிப்பக வெளியீடுகள்.

ராவணப் பெரியார்	0	8	0
புது ரஷ்யா	0	8	0
இந்தியாவின் குறைபாடுகள்	0	8	0
இரணியன் அல்லது இணையற்ற வீரன்	0	8	0
பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்)	0	8	0
பெண் ஏன் அடிமையானாள்?	0	8	0
நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா?	0	6	0
கர்ப்ப ஆட்சி	0	6	0
பெரியார்பெருந்தொண்டு	0	6	0
பகுத்தறிவு அல்லது மரணசாஸனம் 2ம்பாகம்	0	4	0
பொதுவுடைமைத் தத்துவங்கள்	0	4	0
புராண ஆபாசங்கள் (தருமபரீட்சை)	0	4	0
மதப்புரட்சி	0	4	0
வால்டையரின் வாழ்க்கைச் சரிதை	0	4	0
கார்ல் மார்க்ஸ்	0	4	0
திராவிடக்கழக லட்சியம்	0	4	0
மொழி-எழுத்து	0	4	0
இயற்கை வழி-ஆத்மீக வழி	0	4	0
அப்பரும் திருஞான சம்பந்தரும்	0	3	0
சோஷியலிசம்	0	3	0
ராமலிங்க சுவாமி பாடல்	0	2	0
சமதர்ம கீதம்	0	1	0
தலைவர் பெரியார்.			
தத்துவவிளக்கம்	0	12	0
வெளியேறு	0	6	0
சமதர்ம உபன்யாசம்	0	4	0
இலங்கை உபன்யாசம்	0	3	0
இராமாயணப் பாத்திரங்கள்	0	3	0
மேல்நாடும், கீழ்நாடும்	0	3	0
திருச்சிப் பிரசங்கம்	0	2	0
காங்கரஸ் திராவிடனுக்கு விண்ணப்பம்	0	1	0
தமிழ் இசை-நடிப்புக் கலைகள்	0	1	0
ஜஸ்டிஸ் கட்சிக்குக் கிராக்கி, புதுகட்சியா?	0	1	0
உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை?	0	3	0
இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து!	0	2	0
இதிகாசங்கள் புகட்டும் நீதி	0	2	0
உண்மைத் தொழிலாளி யார்?	0	2	0

கிடைக்குமிடம்:-
கச்சேரி வீதி, ஈரோடு.
94 C. பிராட்வே,
சென்னை.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE